# ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව
# இலங்கைப் பாராளுமன்றம்
# Parliament of Sri Lanka



# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# ANNUAL PERFORMANCE REPORT
# 2016

වැය ශීර්ෂය
தலைப்பு } 16
**Head**

ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව, ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ

**இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**

**Parliament of Sri Lanka, Sri Jayewardenepurakotte**

# இலங்கைப் பாராளுமன்றம்
# தலைப்பு இலக்கம் 16
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை – 2016

## உள்ளடக்கம்


| இலக்கம் | விபரம் | பக்கம் |
|---|---|---|
| 1. | பணிகள் | 3 |
| 2. | பிரதான தொழிற்பாடுகள் | 3 |
| 3. | நிறுவனக் கட்டமைப்பு | 3-6 |
| 4. | பணியாட்டொகுதி விபரங்கள் | 6 |
| 5. | **வருடாந்த செயலாற்றுகை** | |
| 5.1 | நிதி நிர்வாகம் | 7-12 |
| 6. | சட்டவாக்க சேவைகள் திணைக்களம் | 18-19 |
| 6.1 | துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் | |
| 6.2 | விசேட நடவடிக்கைகளுக்கான குழுக்கள் | |
| | (i) அரசாங்க நிதி பற்றிய குழு | 15 |
| | (ii) தெரிவுக் குழு | 15 |
| | (iii) சிறப்புரிமைகள் பற்றிய குழு | 15 |
| | (iv) உயர் பதவிகள் பற்றிய குழு | 15 |
| | (v) நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு | 16 |
| | (vi) அரசாங்கக் கணக்குகள் குழு | 16-19 |
| | (vii) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு | 20-21 |
| | (viii) பொது மனுக்கள் பற்றிய குழு | 21 |
| 6.3 | விசேட குழுக்கள் | 22 |
| 6.4 | சட்டமூல அலுவலகம் | 22-25 |
| 6.5 | சபை ஆவண அலுவலகம் | 25-26 |
| 6.6 | பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் அலுவலகம் | 26 |
| 6.7 | பாராளுமன்ற நூலகம் | 27 |
| 7. | படைக்கலச் சேவிதர் திணைக்களம் | 28-29 |
| 8. | நிருவாக திணைக்களம் | 30-32 |
| 9. | ஹன்சாட் திணைக்களம் | 32-33 |
| 10. | இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம் | 33 |
| 11. | தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவ திணைக்களம் | 33 |
| 12. | உள்ளகக் கணக்காய்வு அலுவலகம் | 33-34 |
| 13. | வெளிநாட்டுத் தொடர்புகள் மற்றும் ஒழுங்கு மரபுகள் அலுவலகம் | 34-36 |
| **பாராளுமன்றத்தின் நிறுவனக் கட்டமைப்பு** - படக்குறிப்பு - (பின்னிணைப்பு – 01) | | 37 |

# இலங்கைப் பாராளுமன்றம்
# தலைப்பு இலக்கம் - 16
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை – 2016

## 1. பணிகள்

சட்டம் இயற்றுபவர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் நாட்டின் பொதுநிதிப் பயன்பாட்டை நுணுக்கமாக ஆராய்பவர்கள் என்ற வகையில், தமது பணிகளை பயனுறுதிமிக்க வகையிலும் வினைத்திறன் மிக்கதாகவும் நிறைவேற்றுகையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உதவும் செயல் நடைமுறை ரீதியிலான ஆலோசனைகள் மற்றும் வசதிகளை வழங்குதல்.

## 2. பிரதான தொழிற்பாடுகள்

(i) மக்களின் சட்டவாக்கத் தத்துவத்தைப் பிரயோகித்தல்

(ii) அரச நிதி தொடர்பான முழுமையான கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல்

(iii) நிறைவேற்றுத்துறையை மேற்பார்வை செய்தல்

## 3. நிறுவனக் கட்டமைப்பு

கௌரவ சபாநாயகரின் தலைமையிலான பாராளுமன்றத்தின் கடமைகளை வினைத்திறனாக ஆற்றுவதற்குத் தேவையான செயலக மற்றும் பணியாளர் சேவைகள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தினால் வழங்கப்படுகின்றன.

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகம் பின்வரும் திணைக்களங்களைக் கொண்டுள்ளது.

**(பின்னிணைப்பு 01 இல் நிறுவனக் கட்டமைப்பைப் பார்க்க)**

1. படைக்கலச் சேவிதர் திணைக்களம்
2. நிர்வாகத் திணைக்களம்
3. சட்டவாக்க சேவைகள் திணைக்களம்
4. ஹன்சாட் திணைக்களம்
5. இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம்
6. நிதி மற்றும் வழங்கல்கள் திணைக்களம்
7. உணவு வழங்கல், வீடு பராமரிப்புத் திணைக்களம்
8. தகவல் முறைமைகள், முகாமைத்துவத் திணைக்களம்

### 3.1 படைக்கலச் சேவிதர் திணைக்களம்

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பின்வரும் சேவைகளை முடியுமான வரை உயர்ந்த தரத்தில் காலத்துக்கு உகந்ததும் வினைத்திறன் மிக்கதுமானதொரு முறையில் வழங்குவதன் மூலம் பாராளுமன்றத்தின் பயனுறுதியான தொழிற்பாட்டுக்கு உதவுதல்:

- வைபவரீதியான கடமைகள், பாராளுமன்ற சபா மண்டபத்தினுள் ஒழுங்கைப் பேணுதல், செங்கோலின் பொறுப்பும் பாதுகாப்பும், பாராளுமன்ற கட்டடத்தினுள் விருந்தினர்களை அனுமதித்தல், கலரியை மேற்பார்வை செய்தல்

- பாராளுமன்றக் கட்டடத்தைப் பேணுதல் மற்றும் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியினுள் இடவசதிகளை ஒதுக்கீடு செய்தல்

- கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் மூப்புரிமை நிரலைத் தயாரித்து பாராளுமன்ற சபா மண்டபத்தில் அதற்கேற்ப ஆசன ஒதுக்கீடு செய்தல், ஆசன ஏற்பாடுகளை நிருவகித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்

## 3.2 நிர்வாகத் திணைக்களம்

- சட்டம் இயற்றுதல், மேற்பார்வை மற்றும் பொதுநிதி முகாமைத்துவத்தின் மீதான பாராளுமன்ற உறுப்பினர்களின் விடயப்பொறுப்பினை நிறைவேற்றும் முகமாக, அவர்களுக்கு வினைத்திறன் மிக்கதும் உயர் தரத்திலுமான சேவையை வழங்குக்கூடிய மிகவும் உகந்த ஆளணியினரை பணியாட்டொகுதியில் ஆட்சேர்த்தல், பதவியுயர்த்துதல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் உள்ளிட்ட பணியாட்டொகுயின் சகல பிரிவுகளையும் சேர்ந்த ஆளணியினரின் அறிவு, இயலுமை மற்றும் இயலளவினை மேம்படுத்துவதற்கான மனித வள முகாமைத்துவம், மொழித் தேர்ச்சி, கணினி, சமையற்கலை, கணக்கீடு, நூலக சேவைகள் போன்ற விடயத்துடன் இணைந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறிகளை ஒழுங்செய்தல் மற்றும் பணியாட்டொகுதியின் ஆக்கபூர்வமான மனப்பாங்குகளை மேம்படுத்துவதன் மூலம் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல் தொடர்பிலான நடவடிக்கைகள் நிர்வாகத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- இவற்றுக்கு மேலதிகமாக, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தமது பதவிகளில் கடமையாற்றுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட வசதிகள் மற்றும் சேவைகளை உயர் தரத்திலும் துரிதமாகவும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பாராளுமன்ற பணியாட்டொகுதியினரின் போக்குவரத்து பற்றிய நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்தல் ஆகியனவும் நிர்வாகத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. நிர்வாகத் திணைக்களத்தின் பணிகளை ஆற்றுவதற்குப் பின்வரும் பிரிவுகள் பங்களிப்புச் செய்கின்றன:-

    1. தாபன அலுவலகம்
    2. உறுப்பினர் சேவைகள் அலுவலகம்
    3. போக்குவரத்து அலுவலகம்

## 3.3 ஹன்சாட் திணைக்களம்

- பாராளுமன்ற அமர்வுகள், பாராளுமன்றக் குழுக்கள், மாநாடுகள், பொதுநலவாய பாராளுமன்ற அமைப்பு மற்றும் அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியத்தின் மாநாடுகள் ஆகியவற்றின் பக்கச்சார்பற்றதும், துல்லியமானதும், உரிய காலத்திலானதுமான அறிக்கையிடுதலையும், சூசிகை இடுதலையும் ஒலிப் பதிவுகளைக் கண்காணித்தலையும் உறுதிப்படுத்தல்.

## 3.4 இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம்

- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பான ஒரு பொதுச்சொத்து என்ற வகையில் பாராளுமன்றக் கட்டிடம் பாதுகாக்கப்படுவதையும், அது பயனுறுதிமிக்க வகையிலும் வினைத்திறனுடனும் பராமரிக்கப்படுவதையும் பேணப்பாதுகாப்பதை உறுதிப்படுத்துவதை இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம் மேற்கொள்கின்றது.

- பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை பயனுறுதியுடன் முகாமைத்துவம் செய்வதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பணியாளர்களுக்கும் நவீன, வினைத்திறன் மிக்க பணிபுரியும் சூழலை வழங்குதல்.

## 3.5 உணவு வழங்கல், வீடு பராமரிப்புத் திணைக்களம்

- பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பணியாளர்களுக்கும் விருந்தினர்களுக்கும் உணவுகளையும் பானங்களையும் வழங்குதல்.
- உணவகங்களையும் சமையலறைகளையும் முகாமைத்துவம் செய்தல்
- கட்டிடத்தின் உள்ளக மற்றும் வெளிப்புற அழகு வேலைப்பாடுகள், துப்பரவேற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் ஏனைய பராமரிப்புப் பணிகளை முன்னெடுத்தல்.

## 3.6 நிதி மற்றும் வழங்கல்கள் திணைக்களம்

- பாராளுமன்றத்தின் வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்தல், செலவின மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானத்தைத் திரட்டுதல் மற்றும் வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு; கணக்கீடு, இறுதிக் கணக்கு அறிக்கைகளைத் தயாரித்தல்;
- பாராளுமன்றத்துக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் கொள்வனவு வழங்கல் பணிகளை நிருவகித்தல்;
- பாராளுமன்ற உறுப்பினர்கள், ஓய்வுபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், பணியாட் தொகுதியினர், ஓய்வூதியம் பெறுநர்கள், அமைய மற்றும் உதவிப் பணியாளர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துதல்;
- வழங்குநர்களுக்கும் சேவை வழங்கும் நிறுவனங்களுக்கும் உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்.

நிதி மற்றும் வழங்கல்கள் திணைக்களத்தின் கீழ் பின்வரும் பிரிவுகள் தொழிற்படுகின்றன:

1. நிதி மற்றும் கணக்குகள் அலுவலகம்
2. வழங்கல்கள் மற்றும் சேவைகள் அலுவலகம்
3. உணவு வழங்கல் கணக்கீட்டு அலுவலகம்

## 3.7 சட்டவாக்க சேவைகள் திணைக்களம்

சட்டமியற்றுதல், மேற்பார்வை மற்றும் பொது நிதி ஆகிய துறைகளில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தொழில்சார் சேவைகளை வழங்குகின்றது.

பின்வரும் பிரிவுகள் சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தின் கீழ் செயற்படுகின்றன:-

1. சபை ஆவண அலுவலகம்
2. சட்டமூல அலுவலகம்
3. குழு அலுவலகம் - I
4. குழு அலுவலகம் - II
5. அரசாங்கக் கணக்குகள் குழு மற்றும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழு அலுவலகம்
6. பொது மனுக் குழு அலுவலகம்
7. உரைபெயர்ப்பாளர் அலுவலகம்
8. நூலகம்

## 3.8 தகவல் முறைமைகள், முகாமைத்துவத் திணைக்களம்

தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை வினைத்திறனாக முன்னெடுத்தல், இணையப் பாவனையை மேம்படுத்துதல், பாராளுமன்ற இணையத்தளத்தை வினைத்திறனாகவும், பயனுறுதிமிக்க வகையிலும் பேணுதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல், பாராளுமன்ற இணையத் தளத்தை பேணிவருதல், இற்றைப்படுத்துதல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உபகரணங்களைப் பேணிவருதல் ஊடாக :

♦ பாராளுமன்ற செயலாளர் நாயகம் அலுவலகத்தின் அனைத்து தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான நிர்வாகச் செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

## 3.9 வெளிநாட்டு உறவுகள் மற்றும் ஒழுங்கு மரபுகள் அலுவலகமும், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவும் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயற்படுகின்றன.

# 4. பணியாட்டொகுதி விபரங்கள்

2016 ஆம் ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியும் தற்போது சேவையிலுள்ள ஆளணியும் கீழே தரப்பட்டுள்ளன:-

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | | | | தற்போதுள்ள ஆளணி | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பா.செ.நா. | கௌரவ சபாநாயகர் | கௌ பி.சபா. | கௌ கு.பி.த. | பா.செ.நா | கௌரவ சபாநாயகர் | கௌ பி.சபா. | கௌ கு.பி.த. |
| சிரேஷ்ட மட்டம் | 56 | 0 | 0 | 0 | 54 | 0 | 0 | 0 |
| மூன்றாம் நிலை மட்டம் | 163 | 0 | 0 | 0 | 142 | 0 | 0 | 0 |
| இரண்டாம் நிலை மட்டம் | 236 | 0 | 0 | 0 | 190 | 0 | 0 | 0 |
| ஆரம்ப மட்டம் | 474 | 0 | 0 | 0 | 440 | 0 | 0 | 0 |
| அமய/ தற்காலிக | 03 | 45 | 21 | 21 | 02 | 45 | 21 | 17 |
| மொத்தம் (2016.12.31ஆம் திகதி உள்ளவாறு) | 931 | 45 | 21 | 21 | 828 | 45 | 21 | 17 |

## 5. வருடாந்த செயலாற்றுகை

### 5.1 நிதி நிர்வாகம் - 2016 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவுகள்:-

2016 ஆம் ஆண்டுக்கான தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகளாக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் மற்றும் அந்த நிதி ஏற்பாடுகள் செலவு செய்யப்பட்ட விதம் பின்வருமாறு:-

ம.ஜீ.எஸ்.ஏ.-1

# ஒதுக்கீட்டுக் கணக்கு 2016

செலவினத் தலைப்பு இல: 16 | அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : பாராளுமன்றம்

| வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்ட இல. | வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஓ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) | பக்க இல. (தொடர்புடைய மாதிரி ம.ஜீ.எஸ்.ஏ.2 இன் பிரகாரம்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| | மீண்டுவரும் | | | | | | | |
| 1 | கௌரவ சபாநாயகரின் அலுவலகம் | 111,850,000 | 73,000,000 | -5000000 | 179,850,000 | 158,491,725 | 21,358,275 | 42 |
| 2 | தாபனச் சேவைகள் | 1,062,200,000 | 42,300,000 | 24,000,000 | 1,128,500,000 | 1,113,631,721 | 14,868,279 | 42 |
| 3 | கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான | 492,500,000 | 75,600,000 | -19000000 | 549,100,000 | 544,352,718 | 4,747,282 | 42 |
| | உப மொத்தம் (மீண்டுவரும்) | 1,666,550,000 | 190,900,000 | 0 | 1,857,450,000 | 1,816,476,164 | 40,973,836 | 41 |
| | மூலதனம் | | | | | | | |
| 1 | கௌரவ சபாநாயகரின் அலுவலகம் | 6,600,000 | | 0 | 6,600,000 | 2,243,635 | 4,356,365 | 43 |
| 2 | தாபனச் சேவைகள் | 518,200,000 | 54,393,000 | 0 | 572,593,000 | 333,138,846 | 239,454,154 | 44 |
| 3 | கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான | 800,000 | 0 | 0 | 800,000 | 688,088 | 111,912 | 45 |
| | உப மொத்தம் (மூலதனம்) | 525,600,000 | 54,393,000 | 0 | 579,993,000 | 336,070,569 | 243,922,431 | 41 |
| | முழு மொத்தம் | 2,192,150,000 | 245,293,000 | 0 | 2,437,443,000 | 2,152,546,733 | 284,896,267 | 41 |

பக்க இலக்கம் 40 முதல் 71 வரை ம.ஜீ.எஸ்.ஏ 2 முதல் ம.ஜீ.எஸ்.ஏ 10 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புக்கள் இலக்கம் 72 முதல் 75 உள்ளடக்கிய ஏனைய விபரங்களும் இந்த ஒதுக்கீட்டுக் கணக்கிலேயே அடங்கிய பகுதியாகும். அதனால் மேலேயுள்ள கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விபரங்கள், அது தொடர்பான கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புக்களுக்கு இணங்கியதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதையும், திறைசேரிக் கணக்குப் புத்தகங்களுடன் தொடர்புடைய கணக்குகள் ஒப்புநோக்கப்பட்டுள்ளது என்பதையும், அவை சரியென உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலர்
பெயர்: தம்மிக்க தஸநாயக்க
பதவி: பாராளுமன்ற செயலாளர் நாயகம்
திகதி:
W. B. D. DASANAYAKE
Secretary General of Parliament
Parliament
Sri Jayewardenepura - Kotte.

பணிப்பாளர் (நிதி)
பெயர்: கே. ஜீ. எம். ஜெயசாந்த
திகதி: 24.03.2017
K. G. MERWIN JAYASHANTHA
Director (Finance)
Parliament of Sri Lanka
Sri Jayewardenepura Kotte.

# நிகழ்ச்சித் திட்டங்களின் பிரகாரம் ஒதுக்கீட்டுக் கணக்கு 2016

செலவினத் தலைப்பு இல: 16 அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : பாராளுமன்றம்

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் 1 தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

## மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினத்தின் சுருக்கம்

| செலவினத்தின் தன்மை (டீ.ஜீ.எஸ்.ஏ.மாதிரிப் படிவத்துடன்) | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஓ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) | பக்க இல. (தொடர்புடைய மாதிரி டீ.ஜீ.எஸ்.ஏ.-2 இன் பிரகாரம்) |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| (அ) மீண்டுவரும் (டீ.ஜீ.எஸ்.ஏ. 3) | 1,666,550,000 | 190,900,000 | 0 | 1,857,450,000 | 1,816,476,164 | 40,973,836 | 42 |
| (ஆ) மூலதனம் (டீ.ஜீ.எஸ்.ஏ.4) | 525,600,000 | 54,393,000 | 0 | 579,993,000 | 336,070,569 | 243,922,431 | 43-45 |
| மொத்தம் | 2,192,150,000 | 245,293,000 | 0 | 2,437,443,000 | 2,152,546,733 | 284,896,267 | |

பணிப்பாளர் (நிதி)

திகதி : 24.03.2017

ட.ஜீ.எஸ்.ஏ. - 3

# கருத்திட்டத்தின் பிரகாரம் மீண்டுவரும் செலவினம்

செலவினத் தலைப்பு இல: 16 — அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : பாராளுமன்றம்

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 1 தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

| கருத்திட்ட இலக்கம் / பெயர், ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் சகல கருத்திட்டங்களுக்காகவுமான ஏனைய செலவினம் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஓ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **கருத்திட்ட இலக்கம் 01: கௌரவ சபாநாயகரின் அலுவலகம்** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 51,800,000 | 7,000,000 | 0 | 58,800,000 | 57,679,929 | 1,120,071 |
| ஏனைய செலவினம் | 60,050,000 | 66,000,000 | -5,000,000 | 121,050,000 | 100,811,796 | 20,238,204 |
| உப மொத்தம் | 111,850,000 | 73,000,000 | -5,000,000 | 179,850,000 | 158,491,725 | 21,358,275 |
| **கருத்திட்ட இலக்கம் 2 : தாபன சேவைகள்** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 667,200,000 | 35,000,000 | | 702,200,000 | 695,316,196 | 6,883,804 |
| ஏனைய செலவினம் | 395,000,000 | 7,300,000 | 24,000,000 | 426,300,000 | 418,315,525 | 7,984,475 |
| உப மொத்தம் | 1,062,200,000 | 42,300,000 | 24,000,000 | 1,128,500,000 | 1,113,631,721 | 14,868,279 |
| **கருத்திட்ட இலக்கம் 3 : கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வசதிகள்** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 100,000,000 | | 0 | 100,000,000 | 99,997,451 | 2,549 |
| ஏனைய செலவினம் | 392,500,000 | 75,600,000 | -19,000,000 | 449,100,000 | 444,355,267 | 4,744,733 |
| உப மொத்தம் | 492,500,000 | 75,600,000 | -19,000,000 | 549,100,000 | 544,352,718 | 4,747,282 |
| முழு மொத்தம் | 1,666,550,000 | 190,900,000 | 0 | 1,857,450,000 | 1,816,476,164 | 40,973,836 |

பணிப்பாளர்(நிதி)

திகதி : 24.03.2017

ம.ஜீ.எஸ்.ஏ. - 4

# கருத்திட்டத்தின் பிரகாரம் மூலதனச் செலவினம்

செலவினத் தலைப்பு இல: 16 அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : பாராளுமன்றம்

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 01 - தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

கருத்திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 01 - கௌரவ சபாநாயகரின் அலுவலகம்

| செலவு விடய இல. | விடய இல. | நிதியிடல் (குறியீட்டு இல.) | விடயத்தின் விபரம் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஒ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | | புனர்வாழ்வளிப்பும் மூலதன சொத்துக்களின் மேம்படுத்துகை | | | | | | |
| 2001 | | 11 | கட்டடங்களும் கட்டமைப்புகளும் | 2,000,000 | 0 | 0 | 2,000,000 | 510,070 | 1,489,930 |
| 2002 | | 11 | தொழிற்சாலை, இயந்திரம் மற்றும் உபகரணம் | 500,000 | 0 | 0 | 500,000 | 303,600 | 196,400 |
| 2003 | | 11 | வாகனங்கள் | 3,000,000 | 0 | 0 | 3,000,000 | 725,940 | 2,274,060 |
| | | | மூலதன சொத்துக்களின் சுவீகரிப்பு | | | | | | |
| 2101 | | 11 | வாகனங்கள் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 2102 | | 11 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 800,000 | 0 | 0 | 800,000 | 405,965 | 394,035 |
| 2103 | | 11 | இயந்திரம் மற்றும் உபகரணம் | 300,000 | 0 | 0 | 300,000 | 298,060 | 1,940 |
| | | | மொத்தம் | 6,600,000 | 0 | 0 | 6,600,000 | 2,243,635 | 4,356,365 |

பணிப்பாளர் (நிதி)

திகதி : 20.03.2017

டீ.ஜீ.எஸ்.ஏ. - 4

## கருத்திட்டத்தின் பிரகாரம் மூலதனச் செலவினம்

செலவினத் தலைப்பு இல: 16 அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : பாராளுமன்றம்

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 01 - தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

கருத்திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 02 - தாபனச் சேவைகள்

| செலவு விடய இல. | விடய இல. | நிதிமூலம் (குறியீட்டு இல.) | விடயத்தின் விபரம் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஒ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | | புனர்வாழ்வளிப்பும் மூலதன சொத்துக்களின் மேம்படுத்துகை | | | | | | |
| 2001 | | 11 | கட்டடங்களும் கட்டமைப்புகளும் | 1,000,000 | 0 | 0 | 1,000,000 | 472,998 | 527,002 |
| 2002 | | 11 | இயந்திரம் மற்றும் உபகரணம் | 9,000,000 | 0 | 0 | 9,000,000 | 8,924,050 | 75,950 |
| 2003 | | 11 | வாகனங்கள் | 1,000,000 | 0 | 0 | 1,000,000 | 769,614 | 230,386 |
| | | | மூலதன சொத்துக்களின் சுவீகரிப்பு | | | | | | |
| 2101 | | 11 | வாகனங்கள் | 0 | 15,393,000 | 0 | 15,393,000 | 15,392,844 | 156 |
| 2102 | | 11 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 5,000,000 | 2,000,000 | 0 | 7,000,000 | 6,553,207 | 446,793 |
| 2103 | | 11 | இயந்திரம் மற்றும் உபகரணம் | 0 | 37,000,000 | 0 | 37,000,000 | 34,277,957 | 2,722,043 |
| | | | **மனித வள அபிவிருத்தி** | | | | | | |
| 2401 | | 11 | அறிவு மேம்படுத்தலும் கட்டியெழுப்புதலும் | 2,200,000 | | | 2,200,000 | 2,122,961 | 77,039 |
| | | | பாராளுமன்றக் கட்டிடதொகுதி புதுப்பித்தல் | | | | | | |
| 2001 | | 11 | கட்டடங்களும் கட்டமைப்புகளும் | 500,000,000 | | | 500,000,000 | 264,625,215 | 235,374,785 |
| | | | மொத்தம் | **518,200,000** | **54,393,000** | **0** | **572,593,000** | **333,138,846** | **239,454,154** |

பணிப்பாளர் (நிதி)

திகதி : 24.03.2017

ட.ஜீ.எஸ்.ஏ. - 4

# கருத்திட்டத்தின் பிரகாரம் மூலதனச் செலவினம்

செலவினத் தலைப்பு இல: 16 அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : பாராளுமன்றம்

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 01 - தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

கருத்திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 03 - கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வசதிகள்

| செலவு விடய இல. | விடய இல. | நிதியிடல் (குறியீட்டு இல.) | விடயத்தின் விபரம் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஒ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | | புனர்வாழ்வளிப்பும் மூலதன சொத்துக்களின் மேம்படுத்துகை | | | | | | |
| 2001 | | 11 | கட்டடங்களும் கட்டமைப்புகளும் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | | | மூலதன சொத்துக்களின் சுவீகரிப்பு | | | | | | |
| 2102 | | 11 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 300,000 | 0 | 0 | 300,000 | 198,214 | 101,786 |
| 2103 | | 11 | இயந்திரம் மற்றும் உபகரணம் | 500,000 | 0 | 0 | 500,000 | 489,874 | 10,126 |
| | | | மொத்தம் | 800,000 | 0 | 0 | 800,000 | 688,088 | 111,912 |

பணிப்பாளர் (நிதி)

திகதி : 24.03.2017

**அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்கு**

**2016**ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான "அரசாங்க அலுவலர் முற்பண "பி" கணக்கின்" அனுமதிக்கப்பட்ட வரையறையும் உண்மைத் தொகையும் கீழே தரப்பட்டுள்ளன:-

| விபரங்கள் | அனுமதிக்கப்பட்ட வரையறை 2016 (ரூபா) | உண்மைத் தொகை 2016 (ரூபா) | |
|---|---|---|---|
| செலவினங்களின் உச்ச வரையறை | 38,000,000 | 01601-1 | 24,909,561.00 |
| | | 01601-2 | 1,271,958.00 |
| பெறுகைகளின் ஆகக் குறைந்த வரையறை | 28,000,000 | 01601-1 | 31,162,838.63 |
| | | 01601-2 | 107,909.10 |
| உச்ச வரவு மீதி | 175,000,000 | 122,327,984.73 | |

## 6. சட்டவாக்க சேவைகள் திணைக்களம்

## 6.1 துறைசார் மேற்பார்வைக் குழுக்கள்

2015 திசெம்பர் மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைய துறைசார் மேற்பார்வைக் குழு முறை அறிமுகம் செய்யப்பட்டதுடன், மேற்படி 16 குழுக்களின் கீழ் அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் நடவடிக்கைகள் மேற்பார்வை செய்யப்படுகின்றன. அதற்கமைய பின்வரிசை உறுப்பினர்கள் கூடுதலானோரின் பங்கேட்புடன் அங்கத்தவர்களான உறுப்பினர்கள் 20 பேரைக் கொண்டுள்ள மேற்படி துறைசார் மேற்பார்வைக் குழுவினால்;

அ) தமது விடயப்பரப்பின் கீழ் உள்ள விடயங்கள் பற்றிய பூரண அறிவைப் பெற்றுக் கொள்வதற்கும், ஒவ்வொரு நிறுவனத்தினதும் இலக்குகள் மற்றும் நோக்கங்கள் எவ்வாறானதாக இருக்க வேண்டும் என்பது பற்றியும் நிர்ணயித்துக் கொள்ள குழு செயற்படும்;

ஆ) ஒவ்வொரு நிறுவனத்திற்குமான பிரதான நிருவாகச் சட்டங்களுக்கு மேலதிகமாக வேறு சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள், நியதிச் சட்டங்கள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்புக்கள் மூலம் தமது நிறுவனத்தின் செயற்பாடு மற்றும் நடவடிக்கைகளில் ஏற்படுத்துகின்ற தாக்கங்களைத் தீர்மானிப்பதற்காக தமது விடயப் பரப்புக்கு உரித்தான விடயம் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

இ) ஒவ்வொரு நிறுவனமும் தமது விடயப்பரப்பினுள் தயார்செய்துள்ள மற்றும் / அல்லது அமுல்படுத்தியுள்ள பிரதான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் இனங்காணப்படும்;

ஈ) அமைச்சரினால் நிறைவேற்றப்பட்ட செயற்பணிகளை மேற்பார்வை செய்து, இந்தச் செயற்பணிகளை நிறைவேற்றும் போது எதிர்நோக்கிய சவால்களை இனங்கண்டு அரசியலமைப்பின் 43 (1) மற்றும் 44 (2) உறுப்புரைகளுக்கு அமைய அவர்களுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள செயற்பணிகளை அமுல்படுத்துவது தொடர்பான சிபாரிசுகள் வழங்கப்படும்;

உ) சவால்கள் மற்றும் பிரச்சினைகளை இனங்காண்பதற்காக தமது விடயப்பரப்பு / துறை தொடர்பிலான முதன்மைச் சட்டங்களை அமுல்படுத்துவது மேற்பார்வை செய்யப்படும்;

ஊ) துறை தொடர்பில் தற்போது அமுலில் உள்ள சட்டங்கள், ஒழுங்குவிதிகள், யாப்புக்கள் மற்றும் நீதிமன்ற தீர்மானங்களிலிருந்து சமூகத்தில் ஏற்படுத்தப்படுகின்ற அழுத்தத்துக்கு அமைய அவற்றை தொடர்ச்சியாக அமுல்படுத்தல், மட்டுப்படுத்தல் அல்லது நீக்குவதை குழு பரிசீலனை செய்வதுடன், அவற்றை திருத்தியமைத்தல் மற்றும் / அல்லது புதிய சட்டங்களை இயற்ற வேண்டியதன் தேவையை தீர்மானித்தல் ஆராயப்படும்;

எ) அமைச்சினால் புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அமுல்படுத்தப்படுவதை நல்ல முறையில் மேற்பார்வை செய்து, அவற்றை திருத்தியமைக்கின்ற மற்றும் அல்லது புதிய சட்டங்களை விதிக்க வேண்டியதன் அவசியத்தன்மை தீர்மானிக்கப்படும்;

ஏ) இதற்கு மேலதிகமாக, அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்ற சில பிரதான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் ஏற்புடையதன்மை, உற்பத்தித்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் வினைத்திறனை தீர்மானிப்பதும் பரிசீலனை செய்வதும்.

மேற்படி செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக தமது விடயப்பரப்புக்கு உரித்தான விடயங்கள் தொடர்பிலான எழுத்து மூலமான தகவல்கள் / ஆவணங்களைக் கோருவதற்கும், நாளாந்தம் கூட்டங்களை ஒழுங்குசெய்வதற்கும், அலுவலர்களை அழைத்து கேள்வி கேட்பதற்கும், உரிய அமைச்சரிடம் (அமைச்சர்களிடம்) கேள்வி கேட்பதற்கும், நிபுணர்கள் மற்றும் பொது மக்களின் கருத்துக்களை வினவுவதற்கும் மற்றும் வெளிக்கள விஜயங்களை மேற்கொள்வதற்கும் துறைசார்

மேற்பார்வைக் குழு செயற்பட முடியும் என்பதுடன், சுயாதீனமான ஆராய்ச்சிகள், விளக்கங்களை சமர்ப்பிப்பதற்கும், தேவையானவாறு ஆணைக்குழுவின் விசாரணைகள், ஆய்வுகளை நடத்துவதற்குமான இயலுமையும் உள்ளது.

துறைசார் மேற்பார்வைக் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற விசேடமான செயற்பாடுகளின் கீழ் நிறுவனங்களின் செயற்பாடுகள் பரிசீலிக்கப்பட்டு, அவற்றை தமது நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளுக்குப் பொருத்தமான மட்டத்தில் வெளிப்படைத்தன்மையுடனும், முனைப்புடனும், வினைத்திறனுடனும் செயற்படுகின்றனவா என்பதை போதியளவு கண்காணிப்புச் செய்வதுடன், நிறுவனங்களின் செயற்பணிகள், பொறுப்புக்கள், நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களுக்குப் பொருத்தமான தன்மையை தீர்மானிப்பதும், நிறுவனங்களின் நிருவாகக் கட்டமைப்பு மற்றும் அவற்றின் ஆக்கபூர்வமான பங்களிப்பை பரிசீலிப்பதும் மேற்கொள்ளப்படுகின்றது.

அவ்வாறே திட்டங்களை வகுக்கின்றபோது மற்றும் அமுல்படுத்தும் போது வேறு குழுக்களின் கருத்துக்களையும் பெற்று தமது கண்காணிப்புத் திட்டங்களை காலத்திற்கு ஏற்ப திருத்தியமைப்பதும் துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு உரித்தானது.

அதற்கமைய ஒவ்வொரு குழுவினாலும் 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு பொழிப்புரையாகத் தரப்படுகின்றன:-

| | **துறைசார் மேற்பார்வைக் குழு** | **நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை** | **ஆராய்தல்களின் எண்ணிக்கை** | | | | **பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|---|---|
| | | | **சட்டமூலங்கள்** | **கட்டளைகள்/ ஒழுங்குவிதிகள்** | **பிரேரணை** | வருடாந்த செயலாற்றுகை அறிக்கை / உடன்படிக்கை | |
| 01 | பொருளாதார அபிவிருத்தி பற்றிய | 8 | 1 | - | - | 3 | 1 |
| 02 | சர்வதேச உறவுகள் பற்றிய | 11 | 1 | 4 | - | 3 | 5 |
| 03 | தேசிய பாதுகாப்பு பற்றிய | 6 | 1 | - | - | 5 | 2 |
| 04 | நிலைபேறான அபிவிருத்தி மற்றும் சுற்றாடல், இயற்கை வளங்கள் பற்றிய | 12 | 1 | 11 | - | 1 | 3 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 05 | மகளிர் மற்றும் பால்நிலை பற்றிய | 8 | - | - | - | - | - |
| 06 | கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய | 14 | 4 | 8 | - | - | 4 |
| | துணைக்குழுக்கள்<br>• உயர் கல்வி பற்றிய<br>• கல்வி பற்றிய | 4 | தனியார் துறையின் பங்கேட்புடன் இலங்கையின் மருத்துவக் கல்வியை விஸ்தரிப்பது தொடர்பான அறிக்கையைத் தயாரித்தல் | | | | |
| | | 3 | | | | | |
| 07 | சுகாதாரம் மற்றும் மனித நலன்புரி, சமூக வலுவூட்டல் பற்றிய | 11 | 2 | 2 | - | - | 3 |
| 08 | போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் பற்றிய | 12 | | | | | |
| 09 | கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய<br><br>துணைக்குழுக்கள்<br>• கமத்தொழில் கொள்கை பற்றிய | 8<br><br>3 | - | 1 | - | 2 | 1 |
| 10 | சட்ட அலுவல்கள் (ஊழல் எதிர்ப்பு) மற்றும் ஊடகம் பற்றிய | 14 | 5 | 1 | 3 | - | 8 |
| 11 | இளைஞர், விளையாட்டு, கலை மற்றும் மரபுரிமைகள் பற்றிய | 8 | - | 1 | - | - | 1 |
| 12 | வியாபாரம் மற்றும் வாணிப அலுவல்கள் பற்றிய | 7 | - | 1 | - | 1 | 2 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 13 | எரிசக்தி தொடர்பான<br>துணைக் குழுக்கள்<br>• மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பற்றிய | 13<br><br>6 | - | 2 | - | 6 | 3 |
| 14 | உற்பத்தி மற்றும் சேவைகள் பற்றிய<br>துணைக் குழுக்கள் | 7 | - | - | - | - | - |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | • சீமேந்து உற்பத்தி தொடர்பான அரச நிறுவனங்களை மேம்படுத்துவது தொடர்பாக | | | | | | |
| 15 | உள்ளக நிருவாக மற்றும் அரச முகாமைத்தும் பற்றிய | 11 | 1 | - | - | 2 | 1 |
| 16 | நல்லிணக்க மற்றும் வடக்கு, கிழக்கை மீளக் கட்டியெழுப்புவது பற்றிய | 9 | - | - | - | 2 | 1 |

## 6.2 விசேட நடவடிக்கைகளுக்கான குழுக்கள்

**(i) அரசாங்க நிதி பற்றிய குழு**

2015 திசெம்பர் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைய துறைசார் மேற்பார்வைக் குழு அறிமுகம் செய்யப்பட்டதுடன்,

- அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் கீழ் வருமானம் சேகரித்தல்;
- திரண்ட நிதியிலிருந்து கொடுப்பனவுகளைச் செலுத்தல்;
- நிச்சயிக்கப்பட்ட சட்ட ரீதியான தேவைகளுக்கு அரசாங்க நிதியைப் பயன்படுத்தல்;
- அரசாங்க நிதியை ஈடுபடுத்தல்;
- நடப்பு ஆண்டுக்கு ஒதுக்கீட்டுச் சட்டத்தில் உள்ளடங்குகின்ற ஒதுக்கீட்டு வீழ்ச்சிகள், ஒதுக்கீட்டுச் சாட்டுதல்கள் மற்றும் எதிர்பாரா மீதிகள்;
- நடப்பு ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டத்தை அமுல்படுத்தல்;
- அரசாங்க கடன் மற்றும் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் மற்றும் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசாங்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் கீழ் அறிக்கைகள் மற்றும் வெளியீடுகளை பரிசீலனை செய்வதும், குழுவின் செயற்பணியாகும்.

மேலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்து எழும் விடயங்களை குழுவினால் காலத்திற்குக் காலம் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதும், வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை சபாபீடத்தில் சமர்ப்பித்து 06 வாராங்களுக்குள், அராசங்கத்தின் கொள்கைசார் வரையறைக்குள் நிதியானது முறையாக பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை உள்ளடக்கிய மதிப்பீடுகள் பற்றிய அறிகையை சமர்ப்பிப்பதும், வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு ஒதுக்கீட்டுச் சட்டமூலம் இரண்டாவது தடவை மதிப்பீட்டின் பின்னர் 04 நாட்களுக்குள், குழுவினால் ஒட்டுமொத்த மதிப்பீட்டு செலவினம் மற்றும் பெறுகைகளை கணிப்பிடுவதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட

அரச நிதி, நிதியியல் மற்றும் பொருளாதார கருதுகோள்கள் பற்றிய அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதும் குழுவின் பொறுப்பாகும்.

அதற்கமைய, உறுப்பினர்கள் 20 பேரைக் கொண்ட அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளராக கௌரவ எம்.ஏ. சுமந்திரன் செயலாற்றுகின்றார் என்பதுடன், 2016 ஆம் ஆண்டில் 28 குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு குழுவின் 8 அறிக்கைகள் சபாபீடத்தில் வைக்கப்பட்டுள்ளன.

**(ii) தெரிவுக் குழு**

கௌரவ சபாநாயகர் கரு ஜயசூரிய அவர்களின் தலைமையிலான இக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 20 ஆகும் என்பதுடன், 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் 08 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**(iii) சிறப்புரிமைகள் பற்றிய குழு**

கௌரவ திலக் மாரபன அவர்களின் தலைமையிலான இக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 10 ஆகும் என்பதுடன், 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் 4 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**(iv) உயர் பதவிகள் பற்றிய குழு**

கௌரவ சபாநாயகர் கரு ஜயசூரிய அவர்களின் தலைமையிலான இக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 ஆகும் என்பதுடன், 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் 14 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**(v) நிலையியல் கட்டளைகள் பற்றிய குழு**

கௌரவ சபாநாயகர் கரு ஜயசூரிய அவர்களின் தலைமையிலான இக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 9 ஆகும் என்பதுடன், 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் 8 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**(vi) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு**

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவானது 2016ஆம் ஆண்டினுள் 67 நிறுவனங்களை குழுவின் முன் அழைத்து 74 விசாரணைகளையும், விசேட விடயங்கள் பற்றிய 3 விசாரணைகளையும் நடாத்தி அரசாங்க நிறுவனங்களின் செயலாற்றுகை மற்றும் நிதிக் கட்டுப்பாட்டை முறைப்படுத்த தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

**2016 ஆம் ஆண்டு கணக்குகள் குழுவினால் ஆரம்பிக்கப்பட்ட விசேட / புதிய நிகழ்ச்சித்திட்டங்கள்**

குறிப்பாக குழுவினால் ஆராயப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளுக்கு மாத்திரம் கட்டுப்படாது அரசாங்க நிறுவனங்களின் வருமான உருவாக்கம் பற்றி ஆராய்ந்து கணனித் தகவல் தொழில்நுட்ப முறையியலை அறிமுகம் செய்வதன் மூலம் இணைய வழிப்படுத்தல் முறையில் அரசாங்கத்தின் சகல நிறுவனங்களினதும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அதன் மூலம் நிறுவனங்களை மதிப்பீடு செய்து, தற்போது மேற்படி நிறுவனங்களில் காணப்படுகின்ற நிருவாக மற்றும் நிதிசார் பலவீனங்களை இனங்கண்டு அவற்றை முறைப்படுத்துவதற்கு பரிகாரங்களைச் செய்வதும், அதனூடாக குழுவின் நடவடிக்கைகளை மென்மேலும் முறைப்படுத்துவதும், இந்த ஆண்டில் குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளில் முக்கியமானவையாகும்.

**கணக்குகள் குழுவினால் நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டும் செயலமர்வுகள்**

இணைய வழிப்படுத்தல் முறையில் தகவல்களை பெற்றுக் கொள்ளும் நிகழ்ச்சித்திட்டம் பற்றி விழிப்புணர்வூட்டும் செயலமர்வுகள் சிலவற்றை நடாத்துவதற்கு குழு செயற்பட்டது. அதற்கமைய சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு முறையே 2016.03.31 மற்றும் 2016.12.06 ஆகிய இரண்டு தினங்களிலும் விசேட இரு செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

**துணைக்குழுக்களை நியமனம் செய்தல்**

அரசின் பிரதான வருமான உருவாக்க நிறுவனங்களில் வருமானம் திரட்டல், முறைப்படுத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கு தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்வது தொடர்பான பிரேரணைகள் மற்றும் சிபாரிசுகளைச் சமர்ப்பிப்பதற்கு துணைக்குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது.

**குழு அறிக்கைகளை சமர்ப்பித்தல்**

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் 2016.01.01 முதல் 2016.04.07 வரை விசாரணை செய்யப்பட்ட நிறுவனங்களை உள்ளடக்கிய பிரதான அறிக்கை 2016.09.22 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அரசாங்க வருமானம் சேகரிப்பதை மேம்படுத்துவதற்கு தகவல் தொடர்புசாதன தொழில்நுட்பத்தை பயன்படுத்திக் கொள்வது தொடர்பாக நியமனம் செய்யப்பட்ட துணைக்குழுவின் அறிக்கை 2016.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

**2016 ஆம் ஆண்டில் அரசாங்க கணக்குகள் குழுவினால் விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிறுவனங்கள்**

| இல | நிறுவனத்தின் பெயர் | விசாரிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 01 | இலங்கை சுங்கம் | 09.01.2016<br>23.03.2016<br>23.06.2016 |
| 02 | மோட்டார் போக்குவரத்து திணைக்களம் | 09.01.2016<br>24.03.2016<br>10.06.2016<br>06.10.2016 |
| 03 | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | 26.01.2016 |
| 04 | மதுவரித் திணைக்களம் | 26.01.2016 |
| 05 | திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சு | 26.01.2016 |
| 06 | கல்வி அமைச்சு | 27.01.2016 12.02.2016 |
| 07 | காணி அமைச்சு | 27.02.2016 |
| 08 | குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் | 28.01.2016 |
| 09 | பரீட்சைகள் திணைக்களம் | 28.01.2016 |
| 10 | விலைமதிப்புத் திணைக்களம் | 09.02.2016 |
| 11 | ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் | 10.02.2016 |
| 12 | வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் | 11.02.2016 |
| 13 | மாவட்ட செயலகம், குருநாகல் | 12.02.2016 |
| 14 | மாவட்ட செயலகம், கண்டி | 23.02.2016 |
| 15 | சிறைச்சாலைகள் திணைக்களம் | 24.02.2016 |
| 16 | புகையிரத திணைக்களம் | 25.02.2016 |
| 17 | ஊழியர் சேமலாப நிதியம் | 26.02.2016 |
| 18 | நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சு | 08.03.2016 |
| 19 | நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் | 08.03.2016 |

| | | |
|---|---|---|
| | திணைக்களம் | |
| 20 | தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம் | 08.03.2016 |
| 21 | தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் | 08.03.2016 |
| 22 | தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களம் | 10.03.2016 |
| 23 | காணி நிர்ணயத் திணைக்களம் | 10.03.2016 |
| 24 | கல்வி வெளியீட்டுத் திணைக்களம் | 10.03.2016 |
| 25 | நில அளவையாளர் திணைக்களம் | 10.03.2016 |
| 26 | தேசிய நல்லிணக்க கலந்துரையாடல்கள் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு | 10.03.2016 |
| 27 | அரசகரும மொழிகள் திணைக்களம் | 10.03.2016 |
| 28 | கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு | 10.03.2016 |
| 29 | வணிகத் திணைக்களம் | 10.03.2016 |
| 30 | கம்பனிப் பதிவாளர் திணைக்களம் | 10.03.2016 |
| 31 | நிறுவை அலகுகள் தரநியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் | 11.03.2016 |
| 32 | ஏற்றுமதி கமத்தொழில் திணைக்களம் | 11.03.2016 |
| 33 | தொழில் மற்றும் தொழில் சங்க உறவுகள் அமைச்சு | 07.04.2016 |
| 34 | தொழில் திணைக்களம் | 07.04.2016 |
| 35 | மனித வலு மற்றும் தொழில்வாய்ப்புக்கள் திணைக்களம் | 07.04.2016 |
| 36 | கமத்தொழில் அமைச்சு | 07.04.2016 |
| 37 | கமத்தொழில் திணைக்களம் | 07.04.2016 |
| 38 | கமநல சேவைகள் திணைக்களம் | 07.04.2016 |
| 39 | கரையோரம் பேணல் திணைக்களம் | 04.05.2016 |
| 40 | அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம் | 05.05.2016 |
| 41 | சட்டவரைஞர் திணைக்களம் | 06.05.2016 |
| 42 | பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | 18.05.2016 |

| | | |
|---|---|---|
| 43 | சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் | 08.06.2016 |
| 44 | தொல்பொருளியல் திணைக்களம் | 08.06.2016 |
| 45 | இலங்கை கடற்படை | 22.06.2016 |
| 46 | பொலிஸ் திணைக்களம் | 22.06.2016 |
| 47 | இலங்கை வான் படை | 24.06.2016 |
| 48 | இலங்கை இராணுவப் படை | 24.06.2016 |
| 49 | தேசிய கல்வி ஆணைக்குழு | 08.07.2016 |
| 50 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | 08.07.2016 |
| 51 | சட்ட மாஅதிபர் திணைக்களம் (விசாரிக்கப்படவில்லை) | 20.07.2016 |
| 52 | அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு | 20.07.2016 |
| 53 | கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சு | 21.07.2016 |
| 54 | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் | 21.07.2016 |
| 55 | சிவில் பாதுகாப்புத் திணைக்களம் | 10.08.2016 |
| 56 | மேல் மாகாண சபை | 11.08.2016<br>25.10.2016 |
| 57 | நீர்ப்பாசனத் திணைக்களம் | 22.09.2016 |
| 58 | அரசாங்க அச்சுத் திணைக்களம் | 22.09.2016 |
| 59 | சப்பிரகமுவ மாகாண சபை | 04.10.2016 |
| 60 | மாவட்ட செயலகம், அம்பாந்தோட்டை | 05.10.2016 |
| 61 | வத்தளை பிரதேச சபை | 25.10.2016 |
| 62 | மீரிகம பிரதேச சபை | 25.10.2016 |
| 63 | தெஹிவளை கல்கிசை மாநகர சபை | 26.10.2016 |
| 64 | பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் ஊடகத்துறை | 26.10.2016 |

| | | |
|---|---|---|
| | அமைச்சு | |
| 65 | மாவட்ட செயலகம், மாத்தறை | 27.10.2016 |
| 66 | வடமேல் மாகாண சபை | 27.10.2016 |
| 67 | களுத்துறை நகர சபை | 28.10.2016 |

**<u>குழுவினால் விசேடமான விடயங்களை விசாரணை செய்வதற்காக நடாத்தப்பட்ட விசேட குழுக் கூட்டங்கள்</u>**

| **இல** | **விசாரிக்கப்பட்ட விடயம்** | **விசாரிக்கப்பட்ட திகதி** |
|---|---|---|
| 01 | விளைதிறன்மிக்க தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அரசாங்க வருமானம் சேகரித்தலை மேம்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினரால் மற்றும் தரப்பினர்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை சிபாரிசு செய்தல் **(துணைக் குழுவினால் விசாரிக்கப்பட்டது)** | 04.05.2016<br>02.05.2016<br>08.07.2016<br>09.08.2016<br>23.08.2016 |
| 02 | ஆவணமயப்படுத்தப்படாத மற்றும் 2015 சனவரி மாதம் மேற்கொள்ளப்பட்ட முறி வெளியீடு காரணமாக அரசங்க நிதி முகாமைத்துவத்துக்கு இழப்பு / பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதை விசாரணை செய்வதற்காக கூட்டப்பட்ட விசேட குழு | 07.06.2016 |
| 03 | கணக்காளர் சேவையில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக நடாத்தப்பட்ட விசேட குழு | 09.06.2016<br>27.10.2016 |

**(vii) அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழு**

2016ஆம் ஆண்டில் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் பின்வரும் நிறுவனங்களின் செயலாற்றுகை மற்றும் தற்போதைய நடவடிக்கைகள் பற்றி பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கு குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு அறிக்கைகளைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**குழு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

இதற்கு மேலதிகமாக, அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் அதற்குப் ஒப்படைக்கப்பட்ட நடவடிக்கைகள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டு குழுவினால் புலனாய்வு செய்யப்பட்ட நிறுவனங்கள் தொடர்பாக அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் 02 அறிக்கைகள் 2016 ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி மற்றும் 2016 ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

**குழுவினால் புலனாய்வு செய்யப்பட்ட நிறுவனங்கள்**

| இல | நிறுவனத்தின் பெயர் | புலனாய்வுத் திகதி |
|---|---|---|
| 01 | இலங்கை வங்கி | 2016.01.26 |
| 02 | இலங்கை மின்சார சபை | 2016.01.28 |
| 03 | எல்.ரீ.எல். ஹோல்டின்ஸ் தனியார் கம்பனி | 2016.02.09 |
| 04 | ரக்னா லங்கா பாதுகாப்புக் கம்பனி | 2016.02.09 |
| 05 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையின் நம்பிக்கை பொறுப்பாளர் சபை | 2016.02.10 |
| 06 | முதியோருக்கான தேசிய பேரவை | 2016.02.12 |
| 07 | ஸ்ரீ லங்கன் விமான சேவை | 2016.02.12 |
| 08 | அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் | 2016.02.23 |
| 09 | மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை | 2016.02.24 |
| 10 | இலங்கை மத்திய வங்கி | 2016.02.25 |
| 11 | கமத்தொழில் மற்றும் விவசாய காப்புறுதிச் சபை | 2016.02.26 |
| 12 | ரக்னா லங்கா பாதுகாப்புக் கம்பனி | 2016.03.08 |
| 13 | இலங்கை கிரிக்கட் நிறுவனம் | 2016.03.08 |
| 14 | பனை அபிவிருத்தி சபை | 2016.03.11 |
| 15 | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | 2016.03.23 |
| 16 | லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி | 2016.03.23 |
| 17 | இலங்கை மின்சார சபை | 2016.03.24 |
| 18 | தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் | 2016.03.24 |
| 19 | எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி | 2016.04.06 |
| 20 | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 2016.04.07 |
| 21 | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 2016.04.08 |
| 22 | கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம் | 2016.05.18 |
| 23 | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 2016.06.07 |
| 24 | இலங்கை மத்திய வங்கி | 2016.06.08 |

| | | |
|---|---|---|
| 25 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 2016.06.08 |
| 26 | அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 2016.06.09 |
| 27 | தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | 2016.06.23 |
| 28 | முறி வெளியீடு தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பற்றிய குழுக் கலந்துரையாடல் | 2016.06.29 |
| 29 | முறி வெளியீடு தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சமர்ப்பித்தல்கள் | 2016.07.05 |
| 30 | இலங்கை மத்திய வங்கி | 2016.07.07 |
| 31 | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 2016.07.08 |
| 32 | இலங்கை கிரிக்கட் நிறுவனம் | 2016.07.20 |
| 33 | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் | 2016.07.21 |
| 34 | தேசிய லொத்தர் சபை | 2016.07.22 |
| 35 | இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் | 2016.08.09 |
| 36 | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழுள்ள மகநெகும கம்பனி | 2016.08.10 |
| 37 | ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தானம் | 2016.08.10 |
| 38 | இலங்கை மத்திய வங்கி | 2016.08.12 |
| 39 | இலங்கை மத்திய வங்கி | 2016.08.23 |
| 40 | இலங்கை துறைமுக அதிகார சபை | 2016.08.23 |
| 41 | வரை. குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி | 2016.08.25 |
| 42 | ஊழியர் சேமலாப நிதியம் | 2016.08.26 |
| 43 | தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | 2016.09.06 |
| 44 | சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை | 2016.09.07 |
| 45 | இலங்கை மத்திய வங்கி | 2016.09.08 |
| 46 | சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை | 2016.09.09 |
| 47 | வரை. விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி | 2016.09.09 |
| 48 | கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம் / லக்சதொச | 2016.09.20 |
| 49 | மத்திய சுற்றாடல் அதிகார சபை | 2016.09.21 |
| 50 | மக்கள் வங்கி | 2016.09.22 |
| 51 | இலங்கை மத்திய வங்கி | 2016.09.23 |
| 52 | ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தானம் | 2016.10.04 |
| 53 | இலங்கை மத்திய வங்கி | 2016.10.05 |
| 54 | இலங்கை மத்திய வங்கி | 2016.10.20 |
| 55 | இலங்கை மத்திய வங்கி | 2016.10.21 |
| 56 | இலங்கை மத்திய வங்கி | 2016.10.24 |
| 57 | இலங்கை மத்திய வங்கி | 2016.10.26 |
| 58 | விசேட கலந்துரையாடல் | 2016.11.21 |
| 59 | தேசிய லொத்தர் சபை | 2016.12.05 |
| 60 | ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தானம் | 2016.12.07 |

**(viii) பொது மனுக்கள் பற்றிய குழு**

2016 ஆம் ஆண்டு குழுவின் முதலாவது கூட்டம் 2016.02.25 ஆம் திகதி நடாத்தப்பட்டுள்ளதுடன், மேற்படி ஆண்டில் 31 கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டு 300 மனுக்கள் ஆராயப்பட்டு 77 மனுக்களின் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இந்த 77 மனுக் கோப்புக்களில் நிவாரணம் பெற்றுக் கொண்ட மனுதாரர்கள் 18 பேர் உள்ளார்கள் என்பதுடன், எஞ்சிய மனுதாரர்களுக்கு நிவாரணம் வழங்க குழுவிற்கு ஏற்பாடுகள் இல்லாமை காரணமாக மேற்படி கோப்புக்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 2016 ஆம் ஆண்டு குழுப் பணியகத்தற்குக் கிடைக்கப்பெற்ற மனுக்களின் மொத்த எண்ணிக்கை | - | | 1238 |
| நிலையியற் கட்டளைகளுக்கு முரணாக உள்ள காரணத்தினால் குழுப் பணியகத்தினால் நிராகரிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | | 329 |
| எதிர்கால நடவடிக்கைகளுக்காக பணியகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | | | 909 |
| 2016 ஆம் ஆண்டு கௌரவ சபாநாயகரின் அங்கீகாரத்துக்காக அனுப்பி வைக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | | 918 |
| 2015 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற மனுக்களின் எண்ணிக்கை | 50 | | |
| 2016 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற மனுக்களின் எண்ணிக்கை | 868 | | |
| 2016 ஆம் ஆண்டு பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை (2015 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்று மேற்படி ஆண்டில் சமர்ப்பிக்கப்படாது எஞ்சியிருந்த மனுக்களையும் 2016 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது) | | | 954 |
| புலனாய்வுக்காக நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்ஸ்மன்) ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | | 110 |

## 6.3 விசேட குழுக்கள்

**(i) அரசியலமைப்புப் பேரவையின் வழிப்படுத்தல் குழு**

பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையிலான இக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 21 ஆகும் என்பதுடன், 2016 ஆம் ஆண்டில் 46 கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**(ii) நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சிநிரல் பற்றிய பாராளுமன்ற விசேட குழு**

பிரதி சபாநாயகர் கௌரவ திலங்க சுமதிபால அவர்களின் தலைமையிலான இக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 ஆகும் என்பதுடன், 2016 ஆம் ஆண்டில் ஒரு கூட்டத்தொடர் நடாத்தப்பட்டுள்ளது.

**பணி குறித்துரைக்கப்பட்ட குழுக்கள்**

**பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம்**
கௌரவ சந்திராணி பண்டாரவின் தலைமையிலான இக்குழுவின் உறுப்பினர்களான பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 13 ஆகும் என்பதுடன் 2016 ஆம் ஆண்டு 10 கூட்டத்தொடர்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**சிறுவர்களுக்கான பாராளுமன்ற ஒன்றியம்**
கௌரவ (டாக்டர்) சுதர்ஷனி பெர்னாந்துபுள்ளேயின் தலைமையிலான இக்குழுவின் செயற்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 7 ஆகும் என்பதுடன் 2016 ஆம் ஆண்டு 02 கூட்டத்தொடர்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**6.4 சட்டமூல அலுவலகம்**

பாராளுமன்றத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய சட்டவாக்க செயற்பணியான சட்டமியற்றும் நடைவடிக்கைமுறையை, அரசியலமைப்பு மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது சட்ட மூல அலுவலகத்தின் செயற்பணியாகும்.

இதன் கீழ் சட்டமூல அலுவலகத்தினால் அரசாங்க சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவது முதல் மேற்படி சட்டங்களில் கௌரவ சபாநாயகரினால் சான்றுரை புறக்குறிப்பிடப்பட்ட பின்னர் அச்சிடுவது வரை பூர்த்தி செய்யப்பட வேண்டிய சகல சட்டவாக்க படிமுறைகள் தொடர்பிலுமான நடவடிக்கைகள் மும்மொழிகளிலும் ஆற்றப்படுகின்றன.

மேலும் தனியார் உறுப்பினர் சட்டமூலங்களை வர்த்தமானியில் பிரசுரிப்பது முதல் மேற்படி சட்டங்களை அச்சிடும் வரையான நடவடிக்கைகளும் அவ்வாறே மும்மொழிகளிலும் ஆற்றப்படுகின்றன.

2016 ஆம் ஆண்டு இந்த அலுவலகத்திற்குக் கிடைத்த அரசாங்க சட்டமூலங்களின் எண்ணிக்கை 30 ஆகும். சட்டமூலமாக அச்சிடப்பட்ட பின்னர் இவற்றில் 24 பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதுடன், மேற்படி 24 சட்டங்களிலும் கௌரவ சபாநாயகரினால் சான்றுரை புறக்குறிப்பிடப்பட்டது.

**2016 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டமூலங்கள்**

| இல | சட்ட இல | சட்டத்தின் பெயர் | சான்றுரை இடப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 1 | 1/2016 | පළාත් පාලන ආයතන ඡන්ද විමසීම් (සංශෝධන)<br>உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்)<br>Local Authorities Elections (Amendments) | 2016-02-17 |
| 2 | 2/2016 | ධීවර සහ ජලජ සම්පත් (සංශෝධන)<br>கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தம்)<br>Fisheries and Aquatic Resources (Amendment) | 2016-02-17 |
| 3 | 3/2016 | සේවකයන්ගේ ජාතික අවම වේතනය<br>வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம்<br>National Minimum Wage of Workers | 2016-03-23 |
| 4 | 4/2016 | සේවකයන්ගේ අයවැය සහන දීමනාව<br>வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி<br>Budgetary Relief Allowance of Workers | 2016-03-23 |
| 5 | 5/2016 | කාලාවරෝධ (විශේෂ විධිවිධාන)<br>காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்)<br>Prescription (Special Provisions) | 2016-04-26 |
| 6 | 6/2016 | ක්ෂුද්‍රමූල්‍ය<br>நுண்நிதியளிப்பு<br>Microfinance | 2016-05-20 |
| 7 | 7/2016 | ආසියානු යටිතල පහසුකම් ආයෝජන බැංකු ගිවිසුම (අපරානුමත කිරීමේ)<br>ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி உடன்படிக்கை (ஏற்புறுதி)<br>Asian Infrastructure Investment Bank Agreement(Ratification) | 2016-05-30 |
| 8 | 8/2016 | පුද්ගලයන් ලියාපදිංචි කිරීමේ (සංශෝධන)<br>ஆட்களைப் பதிவு செய்தல் (திருத்தம்) Registration of Persons (Amendment) | 2016-07-07 |
| 9 | 9/2016 | සමථ මණ්ඩල (සංශෝධන)<br>மத்தியஸ்த சபை (திருத்தம்)<br>Mediation Board (Amendment) | 2016-07-21 |

| | | | |
|---|---|---|---|
| 10 | 10/2016 | හෝමියෝපති<br>ஓமியோபதி<br>Homoeopathy | 2016-07-27 |
| 11 | 11/2016 | ශ්‍රී ලංකා ජාතික පර්යේෂණ සභාව<br>இலங்கை தேசிய ஆராய்ச்சி பேரவை<br>National Research Council of Sri Lanka | 2016-07-27 |
| 12 | 12/2016 | තොරතුරු දැනගැනීමේ අයිතිවාසිකම පිළිබඳ<br>தகவலுக்கான உரிமை<br>Right to Information | 2016-08-04 |
| 13 | 13/2016 | මුල්‍ය කළමනාකරණ (වගකීම) (සංශෝධන)<br>நிதி முகாமைத்துவம் (பொறுப்பு) (திருத்தம்)<br>Fiscal Management (Responsibility) (amendment) | 2016-08-23 |
| 14 | 14/2016 | අතුරුදහන් වූ තැනැත්තන් පිළිබඳ කාර්යාලය (පිහිටුවීම, පරිපාලනය කිරීම සහ කර්තව්‍යය ඉටුකිරීම)<br>காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்)<br>Office on Missing Persons (Establishment, Administration, and Discharge of Functions) | 2016-08-23 |
| 15 | 15/2016 | සත්ව ආහාර (සංශෝධන)<br>விலங்குத் தீனி (திருத்தம்)<br>Animal Feed (Amendment) | 2016-09-07 |
| 16 | 16/2016 | මරණ ලියාපදිංචි කිරීමේ (තාවකාලික විධිවිධාන) (සංශෝධන)<br>இறப்புக்களிள் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்)<br>Registration of Deaths (Temporary Provisions) (Amendment) | 2016-09-07 |
| 17 | 17/2016 | විශ්වවිද්‍යාල (සංශෝධන)<br>பல்கலைக்கழகங்கள் (திருத்தம்)<br>Universities (Amendment) | 2016-10-05 |
| 18 | 18/2016 | අපරාධ නඩු විධාන සංග්‍රහය (සංශෝධන) පනත<br>குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்தம்)<br>Code of Criminal Procedure (Amendment) | 2016-10-17 |
| 19 | 19/2016 | නීති කොමිෂන් සභා (සංශෝධන)<br>சட்ட ஆணைக்குழு (திருத்தம்)<br>Law Commission (Amendment) | 2016-10-17 |
| 20 | 20/2016 | එකතු කළ අගය මත බදු (සංශෝධන)<br>சேர்பெறுமதி வரி (திருத்தம்)<br>Value Added Tax (Amendment) | 2016-11-01 |
| 21 | 21/2016 | වරාය සහ ගුවන් තොටුපල සංවර්ධන බදු (සංශෝධන)<br>துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தம்)<br>Ports and Airport Development Levy (Amendment) | 2016-11-07 |

| | | | |
|---|---|---|---|
| 22 | 22/2016 | ජාතිය ගොඩනැගීමේ බදු (සංශෝධන)<br>நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்)<br>Nation Building Tax (Amendment) | 2016-11-07 |
| 23 | 23/2016 | විසර්ජන (සංශෝධන)<br>ஒதுக்கீடு (திருத்தம்)<br>Appropriation (Amendment) | 2016-11-07 |
| 24 | 24/2016 | විසර්ජන<br>ஒதுக்கீடு<br>Appropriation | 2016-12-10 |

மேற்படி ஆண்டில் தனியார் உறுப்பினர் சட்டமூலங்கள் 55 ஐ அச்சிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் 57 தனியார் உறுப்பினர் சட்டமூலங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், மேற்படி சகல சட்டமூலங்களும் அவசியமான நடவடிக்கைகளுக்காக உரிய அமைச்சுக்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன. இந்த சட்ட மூலங்களில் தனியார் உறுப்பினர் சட்டமூலங்கள் 5 தொடர்பாக கௌரவ அமைச்சர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 5 அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

2016 ஆம் ஆண்டில் அரசாங்க சட்ட மூலங்கள் தொடர்பிலான துறைசார் மேற்பார்வைக் குழுக் கூட்டங்கள் 22 நடாத்தப்பட்டுள்ளதுடன், மேற்படி குழுக் கூட்டங்களில் சட்டமூல அலுவலக அலுவலர்கள் பங்கேற்று தேவையான பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

இதற்கு மேலதிகமாக,

அ) பாராளுமன்ற இணையத்தளத்தில் உள்ள சட்டவாக்க சேவைகள் பற்றிய தகவல்களை பாராளுமன்ற இணையத் தளத்தின் ஊடாக பொதுமக்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மும்மொழிகளிலும் பெற்றுக் கொள்வதற்கு வசதிகளை ஏற்பாடு செய்தல்;

ஆ) சட்டமூலங்கள் தொடர்பான சட்டவாக்க சேவைத் தகவல் முறைமையை இற்றைப்படுத்தல்;

இ) 2016 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட அனைத்து சட்டங்களையும் தொகுத்து ஒரு புத்தகமாக வடிவமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளள்;

ஈ) 2014-2015 ஆம் ஆண்டின் பாராளுமன்ற சட்டமூலங்கள் தொடர்பிலான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்களை தொகுத்து ஒரு புத்தகமாக அச்சிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளள்;

உ) பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சுகள், மாகாண சபைகள் மற்றும் பலதரப்பட்ட நிறுவனங்களினது வேண்டுகோளுக்கிணங்க சட்டமூலங்கள் / சட்டங்கள் தொடர்பாகவும் அவை நிறைவேற்றப்படும் செயன்முறை தொடர்பாகவும் கடந்த வருடத்திலும் சட்டமூல அலுவலகத்தினால் தகவல்கள் வழங்கப்பட்டன;

ஊ ) சப்பிரகமுவ சுற்றுலா நியதிச் சட்டம் தொடர்பாக சப்பிரகமுவ மாகாண சபையினால் பாராளுமன்றத்தின் கருத்துக்கள் கோரப்பட்டதுடன், அது தொடர்பில் பாராளுமன்றத்தின் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு சப்பிரகமுவ மாகாண சபைக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொண்டமை; மற்றும்

எ) பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம்.ஏ. சுமந்திரன் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் (திருத்த) தனியார் உறுப்பினர் சட்டமூலம் இலங்கை அரசியலமைப்பின் ஒருங்கிணை நிரலுக்கு ஏற்புடையதாக உள்ளதனால் அது பற்றி சகல மாகாண சபைகளினதும் அவதானிப்புக்களையும் பெற்று பாராளுமன்றத்திற்கு அறிக்கையிட்ட பின்னர் மாகாண சபைகளின் கருத்துக்களை உரிய அமைச்சிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொண்டமை ஆகியன 2016 ஆம் ஆண்டு சட்டமூல அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

## 6.5 சபை ஆவண அலுவலகம்

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சபை ஆவண அலுவலகத்தால் செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு

அ. பாராளுமன்ற கூட்டங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் பிரேரணைகள் மற்றும் வினாக்களை உள்ளடக்கிய 04 ஒழுங்குப் புத்தகங்களுடன் அவற்றுக்கான 28 அனுபந்தங்களும், 97 பாராளுமன்ற அமர்வுகள் தொடர்பான ஒழுங்குப் பத்திரங்களும் கூட்ட அறிக்கைகளும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டன.

ஆ. அமைச்சுகள், அவற்றின் கீழ் உள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியன தொடர்பாக அந்தந்த அமைச்சுக்களிளால் அனுப்பப்பட்ட, 398 செயலாற்றுகை மற்றும் வருடாந்த அறிக்கைகளையும், பல்வேறு சட்டங்களின் கீழ் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகளை உள்ளடக்கிய பிரேரணைகளையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இ. பாராளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 736 வாய்மூல விடைக்கான வினாக்கள் பதிவு செய்யப்பட்டு நிலையியற் கட்டளைகளுக்கு இணங்க அவை தொகுக்கப்பட்டு, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு, ஒழுங்குப் புத்தகத்தில் அல்லது உரியவாறு அனுபந்தங்களில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஈ. பாராளுமன்ற உறுப்பினர்களின் 18 தனியார் உறுப்பினர் பிரேரணைகள் மற்றும் 03 திகதியிடப்படாத பிரேரணைகள் பொறுப்பேற்கப்பட்டு, தொகுக்கப்பட்டு, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு, ஒழுங்குப் புத்தகத்தில் அல்லது உரியவாறு அனுபந்தங்களில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

உ. பாராளுமன்ற அலுவல்கள் குழுவின் 39 அமர்வுகள் கூட்டப்பட்டு, இது பற்றிய கூட்ட அறிக்கைகளை மூன்று மொழிகளிலும் வெளியிடவும், குறித்த தீர்மானங்களுக்கான பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான நடவடிக்கைகள் இப்பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

ஊ. 2016ஆம் ஆண்டில் பாராளுமன்றத்துக்கு 09 அனுதாபப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டு, குறித்த ஹன்சாட் அறிக்கை, அதன் பிரித்தெடுக்கப்பட்ட பகுதி, அழைப்புக் கடிதம், கூட்ட ஒழுங்குப்பத்திரம் என்பவற்றை காலமான உறுப்பினரது துணைவருக்கு அல்லது உயிர் வாழுகின்ற அவரது நெருங்கிய உறவினர்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**6.6 பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் அலுவலகம்**

2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டில் பராளுமன்ற உரைபெயர்ப்பாளர் அலுவலகத்தினால் ஆற்றப்பட்ட சேவைகள் பின்வருமாறாகும்.

அ. பாராளுமன்ற கூட்டம் நடைபெறுகின்ற நாட்களில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சபையினுள் சிங்களம்/ஆங்கிலம், சிங்களம்/தமிழ், தமிழ்/ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சமகால உரைபெயர்ப்பு வசதிகள் வழங்கப்பட்டன.

ஆ. துறைசார் மேற்பார்வைக் குழுக் கூட்டங்கள் மற்றும் ஏனைய குழு அறைகளில் நடாத்தப்படுகின்ற ஏனைய கூட்டங்களின் போது கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் குழுக் கூட்டங்களில் பங்கேற்கும் பல்வேறு உத்தியோகத்தர்களுக்கும் சிங்களம்/ஆங்கிலம், சிங்களம்/தமிழ், தமிழ்/ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சமகால உரைபெயர்ப்பு வசதிகள் வழங்கப்பட்டன.

இ. பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு, பொது மனுக்குழு மற்றும் ஏனைய சமகால உரைபெயர்ப்பு வசதிகள் அற்ற குழு அறைகளில் அருகிலிருந்து உரைபெயர்ப்பு சேவையினை வழங்குதல்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டு குழுக் கூட்டங்களுக்கான சமகால உரைபெயர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள் கணிசமானளவு அதிகரித்துள்ளதையும் குறிப்பிடுதல் வேண்டும்.

| பிரிவு | மொழிபெயர்க்கப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சிங்கள/ஆங்கில பிரிவு | : 1964 |
| சிங்கள/தமிழ் பிரிவு | : 1369 |
| தமிழ் / ஆங்கில பிரிவு | : 948 |

**6.7 பாராளுமன்ற நூலகம்:**

பாராளுமன்ற நூலகத்திற்கு உரித்தான மிகவும் பழைமைவாய்ந்த பெறுமதிமிக்க வளங்களை எண்ணியல்மயப்படுத்தும் பொருட்டு தேவையான ஆரம்ப அம்சமான எண்ணியல் நூலகத்துக்கான நுழைவாயில் (Digital Library Portal) தாபிக்கப்பட்டது.

இதன் பெறுபேறாக நூலகத்தின் சகல தரவுகளும் DSPACE மென்பொருள் மூலம் Digital நூலகத்தில் உட்புகுத்தப்பட்டன.

கடந்த வருடத்தில் நூலகத்தின் பிரதான ஒன்றுதிரட்டில் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் புதிய வெளியீடுகள் சேர்க்கப்பட்டன. அவை பின்வருமாறாகும்.

| | | |
|---|---|---|
| புத்தகங்கள் | - | 874 |
| பத்திரிகைகள் | - | 34 |
| வார சஞ்சிகைகள் | - | 16 |

மேலும் பிரபல நூலாசிரியை ஒருவரினால் தமது 360 நூல்கள் கௌரவ சபாநாயகர் ஊடாக அன்பளிப்புச் செய்யப்பட்டன.

நூலகத்தினால் புத்தகங்கள் மற்றும் ஏனைய ஆவணங்கள் 1124 வழங்கப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறுபட்ட விடயங்களுடன் தொடர்புடைய அவசர தகவல் தேவைகள் எழுகின்ற சந்தர்ப்பங்களில் பல்வேறு ஆய்வு நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளம் போன்ற பல்வேறு தகவல் மூலங்களைப் பயன்படுத்தி மிகவும்

குறுகிய காலப்பகுதிக்குள் தகவல்களை உள்ளடக்கிய சுமார் 475 கோப்புகள் தயார் செய்து வழங்கப்பட்டன.

கடந்த ஆண்டு உறுப்பினர்களின் உடனடி ஆய்வுக்காக நாளாந்தம் வெளியாகின்ற தேசிய பத்திரிகைகள் மற்றும் வாரசஞ்சிகைகளிலிருந்து நடப்பு விவகார ரீதியில் முக்கியத்துவமிக்க பல்வேறு செய்திகள் மற்றும் ஆக்கங்கள் சுமார் 2500 இற்கும் அதிகமானவை பிரதிசெய்து மற்றும் ஸ்கேன் செய்து வழங்கப்பட்டுள்ளன.

மேலும் ஹன்சாட் அறிக்கைகள், பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகங்கள், சட்டமூலங்கள், சட்டங்கள் போன்ற பாராளுமன்ற வெளியீடுகளிலிருந்தும் வர்த்தமானப் பத்திரிகை, அமைச்சுக்களின் முன்னேற்ற அறிக்கைகள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் பல்வேறு நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் ஆண்டறிக்கைகள் போன்றவற்றின் அச்சிடப்பட்ட பிரதிகள் மற்றும் இலத்திரனியல் பிரதிகளிலிருந்து தேவையான தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் சுமார் 80 வழங்கப்பட்டுள்ளன.

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில், பாராளுமன்றத்தின் ஆராய்ச்சிப் பிரிவினால் பின்வரும் கருமங்கள் ஆற்றப்பட்டன.

| | |
|---|---|
| பாராளுமன்ற உறுப்பினர்களது கோரிக்கைகள் | – 254 |
| கௌரவ சபாநாயகர்/ செயலாளர் நாயகம் அலுவலகத்தின் பணிகள் மற்றும் பாராளுமன்ற பிரதிநிதிகள் குழுக்கள் வெளிநாட்டு மாநாடுகளில் பங்கேட்கும் போது தேவையான உரைகளை தயார் செய்தல் | - 64 |
| சட்டமூலங்களுக்கான பின்புல அறிக்கைகள் | - 28 |
| தொழில்நுட்ப அறிக்கைகள் | – 10 |
| ஆய்வுப் பத்திரங்கள் | - 08 |

**7. படைக்கலச் சேவிதர் திணைக்களம்**

பாராளுமன்ற செயன்முறையை நிறைவேற்றுவதற்கான வசதி ஏற்பாட்டின் பொருட்டு கௌரவ சபாநாயகர், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களது பணியாட்டொகுதியினர், பாராளுமன்ற பணியாட்டொகுதியினர் மற்றும் இணைந்த பணியாட்டொகுதியினர் ஆகிய பிரிவுகளுக்கு சேவைகளை வழங்குவது இத்திணைக்களத்தின் நோக்கமாகும்.

- **<u>பாதுகாப்பு அலுவல்கள்</u>**

பாராளுமன்றத்தின் பாதுகாப்பினை உயர்ந்த மட்டத்தில் பேணும் அதேசமயம், ஒரு சில பாதுகாப்பு ஏற்பாடுகளை 2016 ஆம் ஆண்டில் தளர்த்த முடிந்ததுடன், இது தொடர்பிலான தீர்மானங்கள் குறித்து கௌரவ உறுப்பினர்கள் மற்றும் பணியாட்டொகுதியினரையும் அரசாங்க உத்தியோகத்தர்களையும் விழிப்புணர்வூட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம், கௌரவ உறுப்பினர்கள், பாராளுமன்ற பணியாட்டொகுதியினர் மற்றும் கடமை நிமித்தம் பாராளுமன்றத்துக்கு வருகை தரும் அரசாங்க உத்தியோகத்தர்கள் மாத்திரமன்றி பாராளுமன்றத்தை பார்வையிடுவதற்காக வருகை தரும் பொதுமக்களுக்கும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

- **<u>உத்தியோகபூர் அடையாள அட்டைகளை விநியோகித்தல்</u>**

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற பணியாட்டொகுதியினர், இணைந்த பணியாட்டொகுதியினர், பொலிசார் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வ அடையாள அட்டைகள் 700 விநியோகிக்கப்பட்டுள்ளன.

- **<u>பாராளுமன்ற கட்டிடத்திற்குள் பிரவேசிக்கின்ற ஆட்களின் வருகையை கட்டுப்படுத்தல் மற்றும் பிரவேசிப்பதற்கான முகாமைத்துவ நடவடிக்கைகளை முறையாக நிறைவேற்றல், பிரவேச கட்டுப்பாட்டு முறைமை மற்றும் வரவேற்புப் பிரிவின் செயற்பாடுகள்</u>**

படைக்கலச் சேவிதர், பிரதி படைக்கலச் சேவிதர், உதவி படைக்கலச் சேவிதர் படைக்கலச் சேவிதர் அலுவலகம் பிரவேச கட்டுப்பாட்டு கருமபீடம் ஆகிய அலுவலகங்களுடன் வரவேட்பு கருமபீடம் மற்றும் பாதுகாப்பு கருமபீடம் ஆகியவற்றை வலையமைப்புச் செய்யும் வகையில் பல்வேறு அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்கும் வசதிகளுடன் பிரவேச கட்டுப்பாட்டு முறைமையை மேம்படுத்தும் செயன்முறையுடன் சம்பந்தப்பட்ட திட்டங்களைத் தயாரிப்பதற்கான அடிப்படைத் தகவல்கள், தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவ திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்கமைய தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக உரிய பணியாட்டொகுதியினரை விழிப்புணர்வூட்டும் ஆரம்ப பயிற்சி நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

- **<u>பணியாட்தொகுதியினரின் வருகை / வெளிச் செல்லல் தகவல்களை அவதானிப்புச் செய்தல் மற்றும் அறிக்கையிடல்</u>**

2012 ஒக்டோபர் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்ட கெமரா முறைமை ஊடாக பணியாட்டொகுதியினரின் வருகை / வெளிச் செல்லல் தொடர்பான மேலதிக அவதானிப்புக்கள் மற்றும் தாபன அலுவலகத்திற்கு அறிக்கையிடும் பணி 2016 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டதுடன், சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை சுமார் 900 ஆகும்.

- <u>அனுதாபப் பிரேரணை நடவடிக்கைகளை நிறைவேற்றல்</u>

கௌரவ சபாநாயகர் / பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் ஆலோசனையின் பேரில் அனுதாபப் பிரேரணைகள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் சுமார் 105 ஆகும்.

- <u>பாராளுமன்ற புத்தாண்டு விழா</u>

கௌரவ சபாநாயகரின் ஆலோசனையின் பேரில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற பணியாட்டொகுதியினர், இணைந்த பணியாட்டொகுதியினர், பாராளுமன்ற பொலிஸ் பிரிவின் பணியாட்டொகுதியினருக்காக 2016 ஆம் ஆண்டு "பாராளுமன்ற புத்தாண்டு விழா" 2016.04.09 ஆம் திகதி கொழும்பு 07, விளையாட்டுத்துறை அமைச்சின் விளையாட்டு மைதானத்தில் மிக வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

**இத் திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பணிகள் விபரமாக பின்வருமாறாகும்.**

- **விசேட விருந்தினர் வருகை ( VIP Visits)**
  2016ஆம் ஆண்டில் விசேட விருந்தினர்களின் வருகை சுமார் 650ஆகக் காணப்பட்டது.
- உறுப்பினர்களின் சாரதிகளுக்கான வாகன அனுமதிப் பத்திரங்கள் 58 வழங்கப்பட்டுள்ளன.

- பத்திரிகை நிருபர்கள் மற்றும் பத்திரிகை செய்தியாளர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் முறையே 167 மற்றும் 20 வழங்கப்பட்டுள்ளன.

- பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குதல். (அண்ணளவாக)

| | | |
|---|---|---|
| I. | 2016ஆம் ஆண்டு வழங்கப்பட்ட கலரி அனுமதிப் பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை | 6200 |
| II. | பாராளுமன்றத்தை/ அமர்வை பார்வையிடுவதற்கான குழு அனுமதிப் பத்திரங்கள் (Group Passes) | 3160 |
| III | குழுக்களாக வருகை தந்த பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை | 210,095 |
| IV | வழங்கப்பட்ட தற்காலிக மாதாந்த அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 2124 |
| V | பாராளுமன்றத்தை/ அமர்வை பார்வையிடுவதற்கு முன்கூட்டிய அனுமதியின்றி வருகை தந்த குழுக்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் | 9105 |

- **பாராளுமன்றத்தை சூழவுள்ள பிரதேசத்தில் கட்டிடங்களை நிர்மாணிப்பது தொடர்பாக பாதுகாப்பு விடுவிப்பு சான்றிதழ் வழங்கல்**

வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக பாராளுமன்ற பாதுகாப்பு விடுவிப்பு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பங்கள் மற்றும் அனுமதி வழங்கியமை பற்றிய விபரங்கள் பின்வருமாறாகும்.

| **கிடைத்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை** | **அனுமதி வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| 157 | 135 |

## 8. நிருவாகத் திணைக்களம்

### 8.1 தாபன அலுவலகம்:-

2016ஆம் ஆண்டில் தாபன அலுவலகம் பின்வரும் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது.

### 8.1.1. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

**அ) உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் / பாடநெறிகள் / விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

பின்வரும் நிறுவனங்களின் ஊடாக (வெளிவாரி) மற்றும் பாராளுமன்றத்தினுள்ளும் பணியாட்டொகுதி அங்கத்தவர்கள் சுமார் 400 பேருக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் / பாடநெறிகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

- திறன் அபிவிருத்தி அமைப்பு
- பிராக் நிறுவனம்
- இலங்கை கட்டளைகள் நிறுவகம்
- இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்
- இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவகம் (SLIDA)
- தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களம்
- தரணய ஒன்றியம்
- நிர்மாண உபகரணப் பயிற்சி நிறுவகம்
- இலங்கை ஜெர்மனி கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம்
- வ/ப. இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவகம்
- அரச கரும மொழிகள் திணைக்களம்

- சாதகமான மனப்பாங்கு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- அரச அச்சுத் திணைக்களம்

**ஆ) வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் / பாடநெறிகள் / விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

- ITEC பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் – இந்தியா – அலுவலர்கள் 11 பேர்
- வெளிநாட்டு பாராளுமன்ற அலுவலர்களுக்கான இந்திய பாராளுமன்றம் நடாத்திய 32 ஆவது பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - இந்தியா – அலுவலர்கள் 7 பேர்
- வரைவு செய்தல் பற்றிய வெளிநாட்டு அலுவலர்களுக்காக இந்திய பாராளுமன்றம் நடாத்திய 32 ஆவது பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - – இந்தியா – அலுவலர்கள் 2 பேர்
- மாலைதீவு சட்டவாக்கப் பேரவை ஒழுங்கு செய்திருந்த பழக்கப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் – மாலைதீவு – அலுவலர்கள் 9 பேர்
- ஆசிய பிராந்திய அரச கணக்குகள் குழு அலுவலர்களுக்கான கூட்டம் – பூட்டான் – 1 அலுவலர்
- பாராளுமன்ற ஆராய்ச்சி மையங்களின் பிராந்திய கூட்டம் – ஜோர்தான் – அலுவலர்கள் 3 பேர்
- இந்தியாவின் லோக் சபை கற்கை சுற்றுலா – இந்தியா அலுவலர்கள் 5 பேர்
- ஆசிய மற்றும் கிழக்காசிய பிராந்திய பாராளுமன்ற பணியாட்டொகுதி அபிவிருத்தி செயலமர்வு – பாகிஸ்தான் – அலுவலர்கள் 2 பேர்
- உலக இலத்திரனியல் பாராளுமன்ற கருத்தரங்கு – சிலி – 1 அலுவலர்
- பாராளுமன்ற நூலகம் மற்றும் ஆராய்ச்சி பற்றிய சர்வதேச நூலக சங்கத்தின் வருடாந்த கருத்தரங்கு – அமெரிக்கா – அலுவலர்கள் 2 பேர்
- ஆசிய பாராளுமன்ற சபையின் பணியாட்டொகுதி மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் பற்றிய நிலையியற் குழுக் கூட்டம் மற்றும் 1 ஆவது நிறைவேற்று சபைக் கூட்டம் – கம்போடியா – 1 அலுவலர்
- 65 ஆவது வெஸ்ட்மினிஸ்ரர் கருத்தரங்கு – ஐக்கிய இராச்சியம் – அலுலவர்கள் 2 பேர்
- திறன்விருத்திச் செயலமர்வு – ஐக்கிய இராச்சியம் – 2 அலுவலர்
- ஆஸ்திரிய பாராளுமன்ற கற்கைச் சுற்றுலா – ஆஸ்திரியா – 1 அலுவலர்
- பாராளுமன்ற சபைக்கூடத்தில் ஒலி முறைமையை பொருத்துவது பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் – சிங்கப்பூர் – அலுவலர்கள் 5 பேர்

**8.1.2. தாபன பணிகள்**

**ஆட்சேர்ப்பு** – பாராளுமன்ற பணியாட்டொகுதிக்கு புதிய ஊழியர்கள் 66 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்கள்.

**காப்புறுதி திட்டம்** – இலங்கை காப்புறுதிக் கம்பனியுடன் இணைந்து அமுல்படுத்துகின்ற பணியாட்டொகுதியினரின் காப்புறுதிக்கு 2016 ஆம் ஆண்டு செலவிடப்பட்ட தொகை ரூபா 4,384,280.42 ஆகும்.

**8.2 உறுப்பினர் சேவை அலுவலகம்:-**

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் தமது பதவியின் அலுவல்களை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தேவையான அங்கீகரிக்கப்பட்ட வசதிகள் மற்றும் சேவைகளை உரிய விதத்தில் உரிய நேரத்தில் அவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும், பாராளுமன்றத்தின் உரிய பிரிவுகள் ஊடாக அவை உரிய விதத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்தலும் இப்பிரிவின் முக்கியமான பணியாகும்.

2016ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு புதிய கடமைரீதியிலான தொலைபேசி வசதிகளை வழங்குதல், அவர்களுக்குத் தேவையான காகிதாதிகளை உரிய அளவில் வழங்குதல், தனிப்பட்ட பாதுகாப்புக்கான துப்பாக்கிகளை வழங்குவது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், கௌரவ சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தை பராமரித்தல், நுவரெலியாவில் அமைந்துள்ள “சேனாதிபதி இல்லம்” விடுமுறை இல்லத்தின் நிருவாக நடவடிக்கைகள் இந்த அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன், பராமரிப்பு நடவடிக்கைகளை இணைப்பாக்கம் செய்வதும் மேற்கொள்ளப்படுகின்றது. மாதிவெல உறுப்பினர் விடுதிகளின் பராமரிப்பு நடவடிக்கைகளை இணைப்பாக்கம் செய்தல் மற்றும் நிர்வகித்தல் ஆகிய பணிகள் இந்த அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்துடன் உறுப்பினர்சவை பிரிவானது இலங்கை மின்சார சபை மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக துறை அமைச்சுடனும் இணைந்து செயற்படுவதோடு இச்சேவை பிரிவானது குறித்தொதுக்கப்பட்ட காலப்பிரிவினுள் கௌரவ உறுப்பினர்களுக்கு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான வெளிப்படுத்துகை வருடாந்த அத்தியாவசிய படிவங்களை வழங்குவதுடன் அது தொடர்பான உறுப்பினர்களுக்கு அறியப்படுத்துகின்றது.

**8.3 போக்குவரத்து அலுவலகம் :-**

பாராளுமன்ற பணியாட்டொகுதி மற்றும் இணைந்த பணியாட்டொகுதியினரின் பிரயாண வசதிகளைச் செய்துகொடுத்தல், வாகனப் பராமரிப்பு மற்றும் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் இந்த அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## 9 ஹன்சாட் திணைக்களம்

2016 ஆம் ஆண்டில் ஹன்சாட் திணைக்களம் நிறைவேற்றிய கடமைப் பொறுப்புகள் பின்வருமாறு.

- 97 பாராளுமன்ற அமர்வு நாட்கள் அறிக்கையிடலுக்கு உட்படுத்தப்பட்டன.
- அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE), அரசாங்கக் கணக்குக் குழு (PAC), உயர் பதவிகள் பற்றிய குழு, சிறப்புரிமைகள் பற்றிய குழு, பெண் உறுப்பினர்களின் ஒன்றியம், சிறுவர் ஒன்றியம், நிலையியல் கட்டளைகள் பற்றிய குழு, ஆலோசனைக் குழுக்கள் (விசேட), நிலையியல் குழுக்கள் மற்றும் வரவு செலவுத்திட்ட மதிப்பீடு பற்றிய குழுக்கள் உள்ளிட்ட 326 குழுக்கூட்டங்கள் அறிக்கையிடலுக்கு உட்படுத்தப்பட்டன.
- பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டங்களை அறிக்கையிடலுக்கு உட்படுத்தல்.
- திருத்தப்படாத 71 ஹன்சாட் அறிக்கைகளை அச்சுப் பிரதிப்படி சரிபார்த்தல் (தொகுதி 239-244)
- திருத்தப்பட்ட ஹன்சாட் அறிக்கைகளை இறுதி அச்சிடலுக்காக அனுப்புதல். (தொகுதி 238-240)
- 06 ஹன்சாட் பிரிவுத்தொகுதிகள் புத்தகங்களாகக் கட்டுவதற்கு அச்சகத்துக்கு அனுப்பப்பட்டன.
- காலமான 07 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களது அனுதாபப் பிரேரணைகள் உள்ளடங்கிய ஹன்சாட் அறிக்கைகள் அச்சிடுவதற்காக அனுப்பப்பட்டன.
- 235 குழு அறிக்கைகளை பதிப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- 69 ஹன்சாட் அறிக்கைகளுடன் தொடர்புடைய 6 சூசிகைகளை தயாரித்தல் மற்றும் அச்சிடுவதற்கு அனுப்புதல். (தொகுதி 239-244)
- பாராளுமன்ற சபா மண்டபத்தினுள் மற்றும் குழுக்களினுள் நடைபெறும் செயற்பாடுகளின் ஒலிப் பதிவு நாடாக்களை தயாரித்தல்.
- பாராளுமன்ற செயற்பாடுகள் பற்றிய இறுவட்டுக்களை (CD) வழங்குதல் தொடர்பிலான அங்கீகாரத்தை பெற்றுக் கொடுத்தல்.
- நேர்முகப் பரீட்சை சபை, கேள்விப் பத்திர சபை, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் ஏனைய குழுக்களுக்கு ஹன்சாட் பதிப்பாசிரியர் மற்றும் பிரதி ஹன்சாட் பதிப்பாசிரியர்களின் சேவையை பெற்றுக் கொடுத்தல்.

## 10 இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம்

2016 ஆம் ஆண்டினுள் இத்திணைக்களத்தினால் பின்வரும் அலுவல்கள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டன.

- ரூபா 121,733,358.65 செலவில் பாராளுமன்ற சபா மண்டபத்தினுள் தாபிக்கப்பட்டுள்ள ஒலிக் கட்டுப்பாட்டு முறைமையை வழங்கி, பொருத்திச் செயற்படுத்துதல் மற்றும் வெற்றிகரமாக நிறைவு செய்தல்.
- ரூபா 237,000,000.00 செலவில் பாராளுமன்ற சபை மண்டபத்தினுள் மூடிய தொலைக்காட்சி புகைப்படக் கருவி முறைமையை வழங்கி, பொருத்திச் செயற்படுத்துதல் மற்றும் வெற்றிகரமாக நிறைவு செய்தல்.
- 8,771,827.89 பெறுமதியான கடிகார முறைமையை பாராளுமன்றத்தினுள் தாபித்தல்.
- 14,375,000.00 செலவில் பாராளுமன்றத்தினுள் உள்ளக தொலைபேசி முறைமையை தாபித்தலும் வெற்றிகரமாக நிறைவு செய்தலும்.
- குழு அலுவலகம் மற்றும் வழங்கல்கள், சேவைகள் அலுவலகத்தை குளிரூட்டல் செய்தல் மற்றும் வெற்றிகரமாக நிறைவு செய்தல்.
- மருத்துவ நிலையத்தை குளிரூட்டல் செய்தல் மற்றும் வெற்றிகரமாக நிறைவு செய்தல்.

## 11 தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவத் திணைக்களம்

2016 ஆம் ஆண்டில் தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளில், தகவல் மற்றும் தொடர்பாடல் உட்கட்டமைப்பு முறைமையை பராமரித்தல், நிறுவனத்தின் பல்வேறான பிரிவுகளின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான நிதி முகாமைத்துவம், அரசாங்க தொழில்முயற்சிகள் மற்றும் அரசாங்க கணக்குக் குழுவுக்கான தகவல் முகாமைத்துவம், உணவக முகாமைத்துவம், சிக்கனக் கடன் சங்கத்தின் முகாமைத்துவம், விருந்தினர் வருகை பற்றிய தகவல் முகாமைத்துவத்துக்கான முறைமையை உருவாக்கல், உள்ளக பிரயோகங்களை மேம்படுத்தல் மற்றும் பராமரித்தல், பராமரிப்பு சேவை ஒப்பந்தங்கள் தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல், பாராளுமன்ற இணையத்தளத்தை பராமரித்தல், தகவல் அனர்த்த முகாமைத்துவ முறைமையின் மேற்பார்வை ஆகிய நடவடிக்கைகள் முக்கியமானவையாகும்.

## 12 உள்ளக கணக்காய்வு அலுவலகம்:

அ. பாராளுமன்றத்தின் மனித வளம் மற்றும் பொது வளங்களின் வினைத்திறனான பயன்பாட்டை ஊக்குவிப்பதன் ஊடாக, நிறுவன ரீதியான நோக்கங்களை அடையும் முகமாக தாபிக்கப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் 04 கூட்டங்கள் நடத்தப்பட்டு அக்குழுக்களின் அறிக்கைகள் பொதுத் திறைசேரிக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

ஆ. பாராளுமன்றம் அமைந்துள்ள காணியின் நிலஅளவை மற்றும் உறுதிகளின் சிக்கலற்ற தன்மை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இ. நிதி மற்றும் கணக்கு அலுவலகம், வழங்கல் மற்றும் சேவைகள் அலுவலகம், உணவு பானங்கள் திணைக்களம், இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம், தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவத் திணைக்களம் ஆகிய பிரிவுகளின் அலுவல்கள் பற்றி புலனாய்வு செய்து முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடல்.

ஈ. கொடுப்பவுச் சிட்டைகள் (வவுசர்கள்) பற்றிய பூர்வாங்க கணக்காய்வு ஒழுங்காக மேற்கொள்ளப்பட்டது.

## 13 வெளிநாட்டு உறவுகள் மற்றும் ஒழுங்குமரபு அலுவலகம்:

2016 ஆம் ஆண்டில் வெளிநாட்டு உறவுகள் மற்றும் ஒழுங்குமரபு அலுவலகத்தினால் பிரதானமாக பொதுநலவாய பாராளுமன்றச் சங்கம், அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் மற்றும் சார்க் பாராளுமன்ற உறுப்பினர்களின் சங்கம் ஆகியவற்றுடன் தொடர்புடைய அனைத்து செயற்பாடுகளும் சேவைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாநாடுகள், செயலமர்வுகள், சுற்றுலாக்கள், கூட்டங்கள், கற்கைச் சுற்றுலாக்கள் ஆகியவற்றுடன் தொடருபுடைய அனைத்து நடவடிக்கைகளும் ஒழுங்குசெய்யப்பட்டன.

| செயலமர்வு/மாநாடு/கூட்டம் | நடைபெற்ற நாடு | நடைபெற்ற கால எல்லை |
|---|---|---|
| 23வது பொதுநலவாய நாடுகளின் மாநாடு | மலேசியா | 2016 சனவரி 09 முதல் 14 வரை |
| ஐக்கிய இராச்சியத்தின் ஆசிய பிராந்திய செயலமர்வு | இந்தியா | 2016 சனவரி 18 முதல் 21 வரை |
| ஆசிய பிராந்திய அரசாங்க | நேபாளம் | 2016 மார்ச் 10 முதல் 14 |

| | | |
|---|---|---|
| கணக்குக் குழுவின் கூட்டம் | | வரை |
| ஆசிய பிராந்திய செயலமர்வு (பாராளுமன்ற அங்கத்தவர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பில்) | இலங்கை | 2016 சனவரி 31 முதல் பெப்ருவரி 04 வரை |
| சர்வதேச பாராளுமன்ற மாநாடு | ஐக்கிய இராச்சியம் | 2016 மார்ச் 14 முதல் 17 வரை |
| நடு ஆண்டு நிறைவேற்றுக் குழுக் கூட்டம் | ஐக்கிய இராச்சியம் | 2016 ஏப்பிரல் 27 முதல் 30 வரை |
| 13வது கனேடிய பாராளுமன்ற கூட்டத்தொடர் | கனடா | 2016 மே 29 முதல் யூன் 03 வரை |
| 27வது பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற கூட்டத்தொடர் | அவுஸ்திரேலியா | 2016 யூன் 05 முதல் 11 வரை |
| 6வது வெஸ்மினிஸ்ரர் மாநாடு | ஐக்கிய இராச்சியம் | 2016 யூலை 04 முதல் 07 வரை |
| ஆசிய பசுபிக் பிராந்திய செயலமர்வு | அவுஸ்திரேலியா | 2016 யூலை 25 முதல் 28 வரை |
| 8வது பொதுநலவாய நாடுகளின் இளைஞர் பாராளுமன்ற மாநாடு | கனடா | 2016 நவெம்பர் 06 முதல் 10 வரை |
| 65 வது வெஸ்மினிஸ்ரர் செயலமர்வு | ஐக்கிய இராச்சியம் | 2016 நவெம்பர் 21 முதல் 25 வரை |
| 62 வது பொதுநலவாய நாடுகளின் மாநாடு | ஐக்கிய இராச்சியம் | 2016 திசெம்பர் 11 முதல் 17 வரை |
| தென் ஆசிய பிராந்திய சபாநாயகர்களது நிலைபேறான அபிவிருத்தி மற்றும் பொருளாதாரம் பற்றிய மாநாடு | பங்களாதேஷ் | 2016 சனவரி 30 முதல் 31 வரை |
| 134 வது அனைத்து பாராளுமன்ற மாநாடு | சம்பியா | 2016 மார்ச் 17 முதல் 23 வரை |
| அனைத்துப் பாராளுமன்றச் சங்கத்தின் இளம் பாராளுமன்ற பிரதிநிதிகள் தொடர்பிலான உலக மாநாடு | சம்பியா | 2016 மார்ச் 16 முதல் 17 வரை |
| ஆசிய பாராளுமன்றச் சங்கத்தின் சமூக மற்றும் | ஈரான் | 2016 ஏப்பிரல் 25 முதல் 29 வரை |

| | | |
|---|---|---|
| கலாசார அலுவல்கள் பற்றிய நிலையியற் குழுக் கூட்டம் | | |
| சர்வதேச வர்த்தகம் பற்றிய செயலமர்வு | சிங்கப்பூர் | 2016 மே 17 முதல் 19 வரை |
| ஆசிய பாராளுமன்றச் சங்கத்தின் அரசியல் அலுவல்கள் பற்றிய நிலையியற் குழுக் கூட்டம் | ஜோர்தான் | 2016 யூன் 01 முதல் 02 வரை |
| இலங்கை - சீனா பாராளுமன்ற நட்புறவுச் சம்மேளனத்தின் கற்கைச் சுற்றுலா | சீனா | 2016 யூன் 10 முதல் 19 வரை |
| ஆசிய பாராளுமன்றச் சங்கத்தின் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய நிலையியற் குழுக் கூட்டம் | பாகிஸ்தான் | 2016 யூலை 25 முதல் 28 வரை |
| நிலைபேறான அபிவிருத்தி பற்றிய செயலமர்வு | இந்தோனேசியா | 2016 ஆகஸ்ட் 29 முதல் செத்தெம்பர் 01 வரை |
| இலங்கைப் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் கற்கைச் சுற்றுலா | சீனா | 2016 செத்தெம்பர் 12 முதல் 20 வரை |
| சர்வதேச உறவுகள் பற்றிய அமைச்சர்களது செயலமர்வு | சீனா | 2016 செத்தெம்பர் 21 முதல் 29 வரை |
| பணியாட்டொகுதி, நிதி ஒழுங்குவிதிகள் பற்றிய முதலாவது நிறைவேற்றுச் சபை நிலையியற் குழுக் கூட்டம் | காம்போடியா | 2016 செத்தெம்பர் 25 முதல் 28 வரை |
| இலங்கை - பாலஸ்தீனம் பாராளுமன்ற நட்புறவுச் சங்க பிரதிநிதிகளின் உத்தியோகபூர்வ விஜயம் | பாலஸ்தீனம் | 2016 ஒக்றோபர் 10 முதல் 15 வரை |
| கௌரவ சபாநாயகர் தலைமையிலான இலங்கைப் பாராளுமன்ற பிரதிநிதிகளின் உத்தியோகபூர்வ விஜயம் | சீனா | 2016 ஒக்றோபர் 09 முதல் 15 வரை |
| 135 வது அனைத்து பாராளுமன்ற மாநாடு | சுவிற்சர்லாந்து | 2016 ஒக்றோபர் 21 முதல் 28 வரை |
| சுவிற்சர்லாந்து தேசிய | சுவிற்சர்லாந்து | 2016 ஒக்றோபர் 05 முதல் 08 |

| | | |
|---|---|---|
| பேரவையின் சபாநாயகரது மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினது இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம் | | வரை |
| இலங்கையின் பிரதான அரசியல் கட்சிப் பிரதிநிதிகளின் உத்தியோகபூர்வ விஜயம் | சீனா | 2016 திசெம்பர் 12 முதல் 20 வரை |

50 பாராளுமன்ற நட்புறவுச் சங்கங்கள் உள்ளதோடு அந்தச் சங்கங்களுடன் தொடர்புடைய அலுவல்களும் வெளிநாட்டு உறவுகள் மற்றும் ஒழுங்குமரபு அலுவலகத்தினால் நிறைவேற்றப்பட்டன.

பொதுநலவாய பாராளுமன்றச் சங்கம், அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் மற்றும் சார்க் பாராளுமன்ற உறுப்பினர்களின் சங்கம் ஆகியவற்றின் மூலம் பாராளுமன்ற அலுவலர்களுக்காக ஒழுங்குசெய்யப்பட்ட பல்வேறான கற்கைச் சுற்றுலாக்கள் தொடர்பிலான அலுவல்கள் கௌரவ சபாநாயகர், கௌரவ பிரதி சபாநாயகர், கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோரைச் சந்திக்க வருகைதந்த பல்வேறு அரச பிரதிநிதிகள் குழுக்களுக்கு ஏற்புடைய ஒழுங்குமரபு மற்றும் ஊடக நடவடிக்கைகள், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுடைய வெளிநாட்டு பயணங்களுக்கு ஏற்புடையதான வீசா, வெளிநாட்டுக் கடவுச் சீட்டு மற்றும் விமான நிலையத்தில் விசேட அதிதிகளுக்கான முனையத்தை ஒதுக்கும் பணிகள் மற்றும் விமான நிலையக் கடமைகளும் இந்த அலுவலகத்தினால் நிறைவேற்றப்படுகின்றன.


ඇමුණුම - 01
ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුවේ සංවිධාන ව්‍යුහය
( 2014.12.31 දිනට )
N
M
L
K
J
IA
I
H
G
F
E
D
C
B
A

